Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 08 ஹிஜ்ரி 1426 துல்கஜ் 20 (21.01.2006) சனிக்கிழமை இதழ் 113

MANOJ AIR TOURS (PVT) LTD.

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

## 3 பெண்களுக்கும் நாட்டுப்பற்றாளர் கௌரவம்!


கிளிநொச்சி —

மானிப்பாயில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த மூன்று பெண்களுக்கும் விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி நள்ளிரவு வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இராணுவப் புலனாய்வுத் துறையினரும், ஈ.பி.டி.பியினரும் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்படைப்பிரிவின் ஆணையாளரும், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இணைப்பாளருமான நாகேந்திரம் போஜனின் மனைவி, அர்த்தநாரீஸ்வரி, அவரது மகள்களான ரேணுகா, சண்முகா ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இவர்கள் மூவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர்.

## ஞானரதனுக்கு 'மாமனிதர்' விருது தேசியத் தலைவர் வழங்கி கௌரவம்!



கிளிநொச்சி —

ஞானரதன் அவர்களின் இனப்பற்றுக்கும், விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது நற்பணிகளை கௌரவிக்கும் வகையில் மாமனிதர் என்ற அதியுயர் விருதை வழங்குவதில் பெருமை கொள்வதாக தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மாமனிதர் ஞானரதனின் மறைவு குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

தமிழீழத் தேசத்தின் விடிவிற்காகவும், விடுதலைக்காகவும் அயராது பாடுபட்ட ஒரு அற்புதமான மனிதரை நாம் இன்று இழந்து விட்டோம். இந்த நல்ல மனிதரை இழந்து எமது தேசம் இன்று சோகக்கடலில் மூழ்கிப் போய்க்கிடக்கிறது.

ஞானரதன் அண்ணை என அனைவரும் அன்போடு அழைக்கும் வை.சச்சிதானந்தசிவம் அவர்கள் ஒரு நல்ல மனிதர். நெஞ்சத்தில் நேர்மையும், உள்ளத்தில் உயர்ந்த எண்ணமும் கொண்டவர். (12 ஆம் பக்கம் பார்க்க)



# உடதலவின்ன படுகொலை வழக்கு: 5 படையினருக்கு மரணதண்டனை!

கொழும்பு —

கண்டி - உடதலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை வழக்கில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் அவரது இரு மகன்களும் விடுவிக்கப்பட்ட அதேவேளை, 5 இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் தீபானி விஜேசுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று இந்த வழக்கின் தீர்ப்பை வெளியிட்டனர்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி பொதுத் தேர்தலின்போது கண்டி உடதலவின்ன பிரதேசத்தில் வானில் சென்று முஸ்லிம் இளைஞர்களை சுட்டுக்கொன்றமை மற்றும் பலரைக் காயப்படுத்தியமை, கொலைக்குத் திட்டமிட்டமை, அதற்கு ஆதா

## ராணுவ படுகொலைகளை கண்டித்து மட்டக்களப்பில் எழுச்சிப் பேரணி!

மட்டக்களப்பு —

தமிழர் தாயகத்தில் அரச படைகளின் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்து நேற்று மாபெரும் கண்டன எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் மட்டக்களப்பு - அம்பிளாந்துறையில் நடைபெற்றது.

முன்னதாக அம்பிளாந்துறை சந்தியிலிருந்து படையினரின் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளை நிறுத்தக்கோரி முழக்கங்கள் எழுப்பியும், சென்றடைந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

பொதுச்சுடரை கரும்புலி மேஜர் செந்தேவனின் தாயார் பாக்கியம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை இரண்டு மாவீரர்களின் தந்தையான தர்மலிங்கம் ஏற்றிவைத்தார்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி பொதுத் தேர்தலின்போது கண்டி உடதலவின்ன பிரதேசத்தில் வானில் சென்று முஸ்லிம் இளைஞர்களை சுட்டுக்கொன்றமை மற்றும் பலரைக் காயப்படுத்தியமை, கொலைக்குத் திட்டமிட்டமை, அதற்கு ஆதரவளித்தமை, கள்ள வாக்குப் பதிவு, வாக்குப்பெட்டிகள், வாக்காளர் அட்டைகளை அபகரித்தமை உட்பட 72 (12 ஆம் பக்கம் பார்க்க)

யும் பொதுக்கூட்டமும் மட்டக்களப்பு - அம்பிளாந்துறையில் நடைபெற்றது.

முன்னதாக அம்பிளாந்துறை சந்தியிலிருந்து படையினரின் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளை நிறுத்தக்கோரி முழக்கங்கள் எழுப்பியும், கண்டன பதாகைகள் ஏந்தியும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பேரணியாக அம்பிளாந்துறை பொது விளையாட்டு மைதானத்தைச்

பொதுச்சுடரை கரும்புலி மேஜர் செந்தேவனின் தாயார் பாக்கியம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை இரண்டு மாவீரர்களின் தந்தையான தர்மலிங்கம் ஏற்றிவைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொறுமை காத்தது போதும் போருக்கு ஆணையிடுங்கள்!

## மட்டக்களப்பு எழுச்சிப் பிரகடனத்தில் தேசியத் தலைவரிடம் வேண்டுகோள்



மட்டக்களப்பு —

வலிந்த போரைத் தொடக்க எதிரி முனைகின்ற நிலையில், இனிமேலும் பொறுத்திருக்காமல் போரைத் தொடங்க ஆணையிடுமாறு தமிழீழத் தேசியத் தலைவருக்கு மட் டக்களப்பு எழுச்சிப் பிரகடனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு அம்பிலாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கண்டன எழுச்சி நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் மேலும் -

அரசு எம்மீது வலிந்து போர் தொடுக்க கங்கணம் கட்டிநிற்கிறது. சர்வதேசத்தின் மத்தியில் எமது இனத் துக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பரப்புரைகளை முன்னெடுத்துச் செல்கிறது. தற்போதைய அரசும், இனவெறிக் கூட்டமும் எமது உயிரிலும் மேலான விடுதலையை பயங்கரவாதமாக்க முனைந்து செயற்படுகிறது.

நாளுக்கு நாள் எமது உடன் பிறப்புக்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். மென்போக்குக் கொண்ட தமிழ் புத்தி ஜீவி கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடலில் நேற்றிரவு மோதல்!

யாழ்ப்பாணம் —

மாதகல் கடலில் நேற்றிரவு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 8 மணியளவில் சந்தேகத்திற்கிடமான இரண்டு படகுகளின் நடமாட்டங்களை அவதானித்த கடற்படையினர் அவற்றின் மீது தாக்குதல்களை மேற்கொண்[illegible]ாகவும் -

இதன்பின்னர் (12 ஆம் [illegible]கம் பார்க்க)

## தம்பசிட்டியில் நேற்றிரவு குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 8 மணியளவில் தம்பசிட்டி - மாயக்கைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அல்வாய் கிழக்கு அத்தாயைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை சுந்தரலிங்கம் (வயது 53) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்ட வராவார்.

பருத்தித்துறையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியினரின் அடாவடிகளை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## ஜனாதிபதிக்கு கஜேந்திரன் எம்.பி கடிதம்

யாழ்ப்பாணம் —

தீவகத்தில் கடற்படையினருடன் இணைந்து தேசவிரோதக் குழுவான ஈ.பி.டி.பியினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்திவரும் அடாவடித்தனங்களை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீவக மக்கள் மீதான வன்முறைகளை விளக்கி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த அவசர கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாண மாவட்டம் - தீவகப் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடும் ஈ.பி.டி.பி துணை ஆயுதக்குழுவினர் பொதுமக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் கடற்படையினருடனும், இராணுவத்தினருடனும் இணைந்து பல பொதுமக்களைக் கொலை செய்துள்ளனர். கடந்த 17 ஆம் திகதியன்று அனலைதீவு தெற்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி விநாயகராசா என்பவரைக் கைதுசெய்து விசாரணைக்காக கொண்டு சென்றுள்ளனர். பின்னர் ஊர்காவற்துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து குறிப்பிட்ட நபர் விடுவிக்கப்பட்டார்.

சட்டத்திற்கு முரணான கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பியினரை பொலிஸார் கைது செய்யவில்லை. இதன்மூலம் பொலிஸார் ஈ.பி.டி.பியினரின் வன்முறைகளுக்கு ஒத்துழைப்பதால் அவர்களின் அடாவடிகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஒரு வார காலமாக வேலணை நேதாஜி சனசமூக நிலையப் பகுதிக்குச் செல்லும் ஈ.பி.டி.பியினர் - அங்குள்ள தமது ஆதரவாளர் ஒருவர் வீட்டில் இரவில் தங்கியிருந்து இரவு வேளையில் அயல் வீடுகளுக்கு கற்களை எறிந்தும், அயலவர்களை தகாத வார்த்தைகளால் ஏசியும் வலிந்து வன்முறைக்கு இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அந்தப் பகுதியில் மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் தமது சொந்த விடுகளில் இருந்து இடம்பெயரவேண்டிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்துறையில் வைத்து அப்பாவிப் பொதுமகன் கொலை செய்யப்பட்டதை அடுத்து அங்குள்ள மக்கள் இரவு நேரத்தை அச்சத்துடன் கழித்து வருகின்றனர். எனவே நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஈ.பி.டி.பியினரின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்தி அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதவிப்படி வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம் —

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான தை மாதக் கொடுப்பனவுகள் புதன்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களில் பணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் என கரவெட்டி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, காசநோய் மற்றும் புற்றுநோயாளருக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம் —

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோல விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் (1008 சங்குகளால்) ஆரம்பமாகிறது.

சங்காபிஷேகத்தையடுத்து வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று, பூந்தண்டிகையில் கருணாகரப் பிள்ளையார் திருவீதியுலா வருவார்.

## துணைப்படை வீரர் சாவடைந்தார்

யாழ்ப்பாணம் —

சுகவீனம் காரணமாக தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் கடந்த புதன்கிழமை சாவடைந்தார்.

முருங்கன் - செம்மண்திடலை சொந்த இடமாகவும் மன்னார் பள்ளமடுவைத் தற்காலிக இடமாகவும் கொண்ட வீரவேங்கை ஜெயந்திரன் (முத்தையா ஜெயந்திரன்) என்பவரே சாவடைந்தவராவார்.

## வலயக் கல்வி அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்ற ஒளிவிழா

யாழ்ப்பாணம் —

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் ஒளிவிழா நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருந்தவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை எவ்.ஏச்.கனியூட் நிகழ்த்தினார்.

காப்பாளர் உரையை வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினமும் கிறிஸ்மஸ் செய்தியை யாழ்.மரியன்னை பேராலய பங்குத்தந்தை அருட்கலாநிதி மைக்கல், ஏ.பி.ஆர். சௌந்தரநாயகம், நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலய பங்குத்தந்தை அருளம்பலம் ஸ்டீபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக பரிசுத்த யாக்கோபு ஆலய பாடசாலை குழுவினரால் கிறிஸ்மஸ் பாடலும் இசைக்கப்பட்டது.

## பருத்தித்துறை நகரசபை

# பொது நூலகம் மூடப்பட்டமைக்கு வாசகர்கள் மத்தியில் விசனம்!

வடமராட்சி —

பருத்தித்துறை - தும்பளை வீதியில் சிவன்கோவிலுக்கு அருகில் இயங்கி வந்த பொது நூலகம் கடந்த இரு வாரங்களாக மூடப்பட்டிருப்பதற்கு வாசகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி இந்தப் பொதுநூலகத்தில் கடமையாற்றிய சிற்றூழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இதன்பின்னர் மூடப்பட்டிருந்த பொதுநூலகம் இரண்டு வாரங்கள் ஆகியும் இதுவரை திறக்கப்படவில்லையென வாசகர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் பொது நூலகத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட வாசகர்கள் பத்திரிகை வாசிப்பதற்கு மட்டும் செல்வது வழக்கமாகும். அத்துடன் சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதிகளில் பெருமளவான அங்கத்தவர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தப் பொது நூலகத்தை மீளவும் இயக்குமாறு அப்பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# புங்குடுதீவு மக்களின் பிரச்சினை குறித்து அரச அதிபர் ஆராய்வு

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேவைகளைக் கண்டறிந்து தீர்வு வழங்கும் 'குறை கேட்டு முறை செய்தல்' என்னும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கே. கணேஸ் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், அங்கு முன்னெடுக்கவேண்டிய தேவைகள் தொடர்பாகவும் தகவல்களை சேகரிக்கவுள்ளார்.

புங்குடுதீவில் இயங்கும் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் தமது பிரச்சினைகள் மற்றும் மக்களின் அவசிய தேவைகள் எழுத்துமூலம் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும். தனிமனிதன் அல்லது நிறுவனத்தின் முறைப்பாடுகள், அரச நிர்வாகத்தால் கவனிக்கப்படாதிருந்தால் அல்லது வஞ்சிக்கப்பட்டிருந்தால் அரச அதிபரிடம் நேரடியாகக் கூறி தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் தங்களது கோரிக்கையின் பிரதியை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு தெய்வக்குழந்தைகள் இல்லத்தின் தலைவர் எஸ்.ஜே.பூராஜா தெரிவித்தார்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
பரமசிவன்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.
காட்சிகள்;- 09.00, 12.30, மாலை 3.30, (புதிய நேரம்)



மனோகரா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
இயக்கம் ரமணா
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)



ராஜா யாழ்ப்பாணம்




காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)




## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் I.S.O - 9001:2000 தரச்சான்றிதழ் பெற்ற காப்புறுதி நிறுவனத்திற்கு வடமராட்சி, தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து பிரதேச பிரதிநிதிகள் தேவை.

கல்வித் தகைமை :- க.பொ.த சா/த சித்தி
வயது :- 18 வயதுக்கு மேல் (ஆண்/பெண்)
விண்ணப்ப முடிவுத் திகதி:- 28.01.2006
விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்
விளம்பர இல - 45
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5027)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 02 11 1988



உதிர்வு 08 12 2005

### நாகேந்திரன் டிக்ஷன்

(யா/நெல்லியடி ம.ம.வித்தியாலய க.பொ.த (சா/த) மாணவன்)

ஈரவிழிகளுடன் ஈன்றெடுத்த அன்னை துடிதுடிக்க
இனி என்று காண்போம் என்று தந்தை கலங்கிநிற்க
ஈசன் பாதத்தில் அமைதிபெறும்

டிக்ஷனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், நினைவஞ்சலியும் [21.01.2006] இன்று காலை 6 மணிக்கு அவரது இல்லத்தின் அருகில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகாத்மா வீதி,
நெல்லியடி..

[C/5025]

தகவல்
குடும்பத்தினர்

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



நிகழும் பார்த்திப வருடம் மார்கழித் திங்கள் 18 ஆம் நாள் (02.01.2006) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி நளினி பத்மநாதன்

அவர்களின் வீட்டுக்கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் 22.01.2006 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


'ஈஸ்வர ஜோதி'
ஏழாலை மேற்கு
சுன்னாகம்.

(சி-5028)

வைத்திய கலாநிதி
பேரம்பலம் பத்மநாதனும் குடும்பத்தினரும்
பேரம்பலம் அன் சன் (மருந்துக்கடை)
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்,

# அமெரிக்க நிலைப்பாட்டை கண்டித்து தமிழகத்தில் பரவலான ஆர்ப்பாட்டம்!

## தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஏற்பாடு



சென்னை —

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து எதிர்வரும் 28 ஆம்திகதி தமிழகத்திலுள்ள முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

சிங்கள அரசின் பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து, ஈழத் தமிழர்களை மிரட்டும் வகையில் அமெரிக்கத் தூதுவர் ஆற்றிய உரைக்குக் கண்டனம் தெரிவித்தே தமிழக நகரங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக 30 இற்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்களை உள்ளடக்கிய தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அவசரக்கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சிப் பொதுச்செயலாளர் பெ.மணியரசன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், தமிழ் - தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் சார்பில் வன்னியரசு, மார்க்சிய - பெரியாரிய பொதுவுடமைக் கட்சி சார்பில் வாலாசா வல்லவன், தமிழர் தேசிய இயக்கப் பொதுச்செயலாளர் கா.பரந்தாமன், கி.த. பச்சையப்பன், மு.அந்தாலனார், தமிழப்பன், செவ்வியன், ம.இலெ. தங்கப்பா, முகம் மாமணி, நா.வை சொக்கலிங்கம், அரங்க. குணசேகரன், புரசை கோ.தமிழேந்தி, அன்பு.தென்னரசன் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன -

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டதை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. மறைந்த தலைவருக்குத் தனது வீர வணக்கத்தை செலுத்துகிறது.

கடந்த 11 ஆம் திகதி இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலங்ஸ்ரீட் தேவையற்ற வகையிலும், ஏகாதிபத்திய நோக்கிலும் ஈழத்தமிழர்களுக்கு மிரட்டல் விடுத்திருப்பதற்கு இந்தக் கூட்டம் கண்டனம் தெரிவிக்கிறது.

சிங்களப் பேரினவாதிகள் நடத்திவரும் அரசப்பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்கா தொடர்ந்து செயற்பட்டு வருவதும், தென்னாசியப் பகுதியில் காலூன்ற முயல்வதும், ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு மட்டுமல்ல -இந்தியாவின் நலன்களுக்கும் எதிரிடையானது என்பதை உணர்ந்து அமெரிக்காவின் வல்லாதிக்கப் போக்கைக் கண்டிக்க ஆர்த்தெழுமாறு அனைவரையும் இந்தக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 11 மணிக்கு சென்னை, தஞ்சை, மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ள மஅமெரிக்க வல்லாதிக்க எதிர்ப்புடு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அனைவருக்கும் இந்தக் கூட்டம் அழைப்பு விடுக்கிறது.

தமிழக மீனவர்களை எல்லை தாண்டி வந்து சிங்களக் கடற்படையினர் சுட்டுக்கொல்வதும், படகுகளையும், மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்துவதும், பிடிக்கப்பட்ட மீன்களை கொள்ளையடிப்பதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டிய இந்தியக் கடற்படை செயலற்று இருப்பதற்கு இந்தக் கூட்டம் கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

தமிழக மீனவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியும், ஆயுதங்களும் கொடுத்துதவ இந்திய அரசு முன்வர வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மத்திய அரசு கச்சதீவைத் திரும்பப் பெறுவதொன்றே - சிங்கள கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதை இந்தக்கூட்டம் சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் கோரிக்கைளை வலியுறுத்தும் வகையில் தமிழக மீனவர்கள் பாதுகாப்பு மாநாட்டை பெப்ரவரி மாதம் மதுரையில் நடத்துவது என இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இதுவரை குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்த அரிசியை நிறுத்துவது என்று இந்திய அரசு செய்துள்ள முடிவை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று அந்த அறிக்கையில் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் திருமலையில் கண்காணிப்புக்குழு செயற்படும்!

கொழும்பு —

திருகோணமலை மாவட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவால் இடை நிறுத்தப்பட்ட பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப்



போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

திருகோணமலையில் வன்செயல் சூழல் ஓய்ந்தவுடன், போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரின் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், கடந்த 17 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளரை சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவருகின்ற வன்முறைகள் சம்பந்தமாகவும், கண்காணிப்பு குழு உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற தடைகள் பற்றியும் அந்தச் சந்திப்பின் போது தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சொல்ஹெய்ம் வருகையின் பின்னர் அரசு பேச்சுக்களை முன்னெடுக்கும்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



கொழும்பு —

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்முடனான பேச்சுக்களின் பின்னர்-சமாதான பேச்சுக்களை முன்னெடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்-

அடுத்த வாரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், அன்ரன் பாலசிங்கம் இலங்கை வரவுள்ளார்.

அவருடனும் பேச்சு நடத்த அரசாங்கம் எண்ணியுள்ளது.

இந்தப் பேச்சுகள் ஆக்கபூர்வமாக அமையும். போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு, திருகோணமலையில் தமது கண்காணிப்புப் பணிகளை இடைநிறுத்தியமை தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனத்தைக் கொண்டுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சு ஆரம்பிப்பதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பங்களிப்பு அவசியமானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை தமிழ் தேசிய கூட்டமைப் பினரைச் சந்தித்தார்.

இதன்போது, இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்துக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் நடந்து கொண்ட விதம் குறித்து அரசாங்கம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குப் பேச்சுகள் மூலம் தீர்வு காண முடியும் என்பதை அரசாங்கம் உறுதியாக நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (01)

# முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை நிராகரிப்பு!

கொழும்பு —



சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

முஸ்லிம்களைத் தனித்தரப்பாகப் பேச்சுக்களில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

முஸ்லிம்களைத் தனித்தரப்பாக இணைத்தால், சிங்களவர்களும் தனித்தரப்பாகத் தங்களை இணைத்துக் கொள்ள கோரிக்கை விடுப்பார்கள் என்பதால் அதை நிராகரிப்பதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதனிடையே, இது விடயத்தில் ஒருமித்த முடிவை மேற்கொள்வதற்காக அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்த முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது.

# ஒரு லட்சம் கையெழுத்துக்களுடன் சொல்ஹெய்முக்கு முறைப்பாடு

கொழும்பு —

ஒரு லட்சம் முஸ்லிம்களின் கையெழுத்துடன் சமாதானப் பேச்சுகளின்போது, முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்று கோரி, மனுவொன்றை நோர்வே சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் கையளிப்பதற்கு முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வரும்போது அவரிடம் இந்த முறையீடு கையளிக்கப்படும் என்றும், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நசீர் அகமட் தெரிவித்தார்.

# ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரை கைதுசெய்யுமாறு நீதிபதி உத்தரவு!

கொழும்பு —

புத்தளம் மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு புத்தளம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதிக்கு முன்னதாக நீதிமன்றில் ஆஜராக பாலித ரங்க பண்டாரவுக்கு நீதிபதி அறிவித்தல் அனுப்பியிருந்தார்.

ஆனால், அவர் ஆஜராகாததால் அவரைக் கைதுசெய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 9 ஆம் திகதி கருவலகஸ்வெல என்னுமிடத்தில் 17 வயது யுவதி ஒருவரைத்தாக்கியமை தொடர்பாக நீதிபதியிடம் கருவலகஸ்வெல பொலிஸார் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, அவரை அடுத்த மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

எனினும், கடந்த 12 ஆம் திகதி மீண்டும் ஆஜரான பொலிஸார் தாக்குதலுக்கிலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள யுவதியின் நிலை மோசமாக இருப்பதால், சந்தேகநபரை அதற்கு முன்னதாக நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையேற்று முன்னைய உத்தரவை இரத்துச் செய்த நீதிபதி, 18 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜராக உத்தரவிட்டிருந்தார். எனினும், அவர் நீதிமன்றில் ஆஜராகாததால் அவரை 25 ஆம் திகதிக்குள் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை மீண்டும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# 2004 பட்டியல்படி தேர்தல்; ஐ.தே.க நீதிமன்றம் செல்லும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு —

உள்ளூராட்சித் தேர்தலை 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது.

கடந்த ஒருமாத காலமாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசகர்கள் நடத்திய ஆய்வின் பின்னர் கட்சிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கமைய இந்த வழக்குத் தொடரப்படவுள்ளது.

2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டமையால், பல லட்சம் பேர் வாக்களிக்கும் உரிமையை இழந்தனர்.

மீண்டும் 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய தேர்தல் நடத்தப்படுமானால், இந்தமுறையும் அவர்கள் வாக்களிக்கும் உரிமையை இழப்பார்கள் என்றும், 2005 ஆம் ஆண்டு பட்டியலுக்கமையவே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் ஐ.தே.க.வலியுறுத்தி வருகிறது.

2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய தேர்தலை நடத்த வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கோரிய போதிலும், அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் கிடைக்காமையால் நீதிமன்றத்தை நாடத் தீர்மானத்துள்ளதாக ஐ.தே. கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும், அனைத்து மக்களினதும் வாக்குரிமையைக் காக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் உள்ளது என்றும், அந்த நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படாவிட்டால், மக்களுடன் இணைந்து அதற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றும் கூறினார்.

## வி.பி.கிண்ணத் தொடர்;

# 59 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா தென்னாபிரிக்கவை தோற்கடித்தது



மெல்பேர்ன்—

வி.பி.கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் 4 ஆவது ஆட்டத்தில் 59 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியை அவுஸ்ரேலியா தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மாட்டின் - ஜேக்கஸ் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிளங்கினர். ஸ்கோர் 17 ஆக இருந்தபோது பொலக் வீசிய பந்தில் 11 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த மாட்டின் போல்டாகி பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து பொண்டிங் களமிறங்கினார். இவர் வழக்கத்தைவிட மிகவும் சிரமப்பட்டே பந்துகளை எதிர்கொண்டார். 19 பந்துகளில் 9 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த இவர் ஸ்கோர் 55 எட்டியபோது ஹோல் வீசிய பந்தை சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புடன் களமிங்கிய சைமன்ஸும் பெரிதாகப் பிரகாசிக்கமுடியவில்லை. ஸ்கோர் 85 ஆக இருந்தபோது 14 பந்துகளில் 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த இவரை ஸ்ரென் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து கிளார்க் களமிறங்க ஆட்டம் ஓரளவுக்குச் சூடுபிடித்தது. ஸ்கோர் 172 ஐ எட்டும்வரை இந்த ஜோடி தாக்குப்பிடித்தது. இந்த நிலையில் 44 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த கிளார்க் - வன்டவத் வீசிய பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹுசே களமிறங்கினார். அதேவேளை, எதிர்முனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த ஜக்கஸ்- வன்டவத்தின் பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது. இவர் 112 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 94 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து ஹுசேயுடன் ஜோடி சேர்ந்த ஹடின் ஒரேயொரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் பொலக்கின் பந்தில் போல்டானார். அடுத்து ஹோப்ஸ் இணைந்து களமிறங்கினார். இவர் நிதானமாக ஆடிக்கொண்டிருக்க ஸ்கோர் 208 ஐத்



தொட்டநிலையில் ஹுசே ஆட்டமிழந்தார். ஹோல் வீசிய பந்தை குரூகரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து லீ 6 ஓட்டங்களுடனும், டோரி 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மக்ராவும், ஹோப்ஸும் ஆடிக்கொண்டிருந்த நிலையில் 49.2 ஆவது ஓவரில் ஹோப்ஸ் - ஹோல் வீசிய பந்தை போத்தாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 47 பந்துகளில் 38 ஓட்டங்களை எடுத்தார். 23 உதிரி ஓட்டங்களுடன் சேர்ந்து அவுஸ்ரேலிய அணி 248 ஓட்டங்களைப் பெற்றது.


பந்துவீச்சில் ஹோல் 4, பொலக் 2, வன்டவத் 2, ஸ்ரென் 1, சிமித் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து 246 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் தென்னாபிரிக்க அணி களமிறங்கியது. லீயும் ஹோக்கும் இணைந்து அபாரமாக வீசிய பந்துகளால் தென்னாபிரிக்க அணி வீரர்கள் பெரிதும் திணறிப் போயினர்.

ஸ்கோர் 12 ஆக இருந்தபோது 9 ஓட்டங்களுடன் சிமித்தும், ஸ்கோர் 16 ஆக இருந்தபோது 1 ஓட்டத்துடன் ஹோலும் - லீ வீசிய பந்தில் பவிலியன் திரும்பினர்.

இதையடுத்து டிபென்னருடன்- கிப்ஸ் களமிறங்க அணி ஓரளவு ஆறுதலைடைந்தது. ஸ்கோர் 84 எட்டும்வரை இவர்கள் தாக்குப்பிடித்தனர். இந்த நிலையில் ஹோக் வீசிய பந்தில் எல்.பிடபிள்யூ முறையில் கிப்ஸ் ஆட்டமிழந்தார். இவர் 53 பந்துகளில் 39 ஓட்டங்களை எடுத்தார். தொடர்ந்து பிறின்ஸ் களமிறங்க ஸ்கோர் 116 ஆக இருந்தபோது டிப்பென்னர் ஆட்டமிழந்தார். லீயின் பந்தில் போல்டான இவர் 41 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

அடுத்து பௌச்சர் களமிறங்கினார். அதேவேளை, ஸ்கோர் 110 ஆக இருந்தபோது பிறின்ஸ் 21 ஓட்டங்களுடன் லீயின் பந்தில் போல்டானார். அடுத்து ஸ்கோர் 123 ஆக இருந்தபோது ஹோக்கில் பந்தில் 5 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் பௌச்சர் ஆட்டமிழந்தார். அதே



ஸ்கோரில் லீயின் பந்தில் கெம்ப் போல்டானார்.

ஸ்கோர் 124 ஆக இருந்தபோது வன்டவத் - ஹோக்கின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பொலக் - போத்தா ஜோடி சற்று நிதானமாக ஆடியதால் மோசமான தோல்வியிலிருந்து தென்னாபிரிக்க அணி தப்பிக்கொண்டது. ஸ்கோர் 185 ஐ எட்டியபோது பொலக் ஆட்டமிழந்தார். 4 சிக்ஸ்ர்கள், 1 பவுண்டரி என 31 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்த இவர் டோரியின் பந்தில் ஹடினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து குரூகரும் வந்தவேகத்திலேயே மக்ராவின் பந்தில் ஆட்ட



மிழக்க தென்னாபிரிக்க அணி 186 ஓட்டங்களுடன் சகல விக்கெற்றுக்களுடன் 59 ஓட்டங்களால் தோல்வி கண்டது. லீ 5 விக்கெட்டுக்களையும், ஹோக் 3 விக்கெட்டுக்களையும், மக்ரா, டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## இலங்கை அணியில் மீண்டும் ஜெயசூரிய!



சிட்னி—

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் வி.பி. கிண்ண போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரிய நேற்றுமுன்தினம் அதிகாலை சிட்னி பயணமானார்.

காயம் காரணமாக அணியிலிருந்து விலக்கப்பட்ட இவர் அவுஸ்ரேலிய தொடருக்கான இலங்கை அணியில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இலங்கை அணி வீரர் பர்வேஸ் மஃரூப் காயமடைந்து நாடு திரும்பியதையடுத்து அவருக்குப் பதிலாக சனத் ஜயசூரிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே அவர் சிட்னி பயணமானார்.

இன்று நடைபெறவுள்ள வி.பி. கிண்ணத் தொடரின் 5 ஆவது போட்டியில் இவர் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## டெஸ்ட் போட்டி அந்தஸ்து ரத்து; சிம்பாப்வே வீரர்கள் போர்க்கொடி

ஹராரே—

மோசமான நிலை, இனப்பிரச்சினை, கிரிக்கெட் சபை - வீரர்கள் பிரச்சினை காரணமாக சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஒருவருடம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதனை எதிர்த்து சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

அணி வீரர்கள் - கிரிக்கெட் சபை நிர்வாகம் சரியில்லை எனக்கூறி தலைவர் பீற்றர் சிங்காகோவை மாற்ற வற்புறுத்தியபோதும், அந்த நாட்டு ஜனாதிபதி றொபேட் முகாபே அதனை மறுத்துவிட்டார். இது அணி வீரர்களுக்கு மீண்டும் எரிச்சலை கிளப்பியுள்ளது.

அதனால் சர்வதேச தொடர்களில் பங்கேற்கமாட்டோம் என்று போர்க்கொடி உயர்த்திவந்தனர்.

இந்தப் பிரச்சினைக்கு நடுவே சிம்பாப்வே கிரிக்கெட் சபைக் கூட்டம் கடந்த புதன்கிழமை கூடியது. அதில் வீரர்கள் பிரச்சினை குறித்துப் பேசப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் கிரிக்கெட் சபைத் தலைவர் பீற்றர் சிங்காகோ கூறியதாவது:-

வீரர்கள் போட்டிகளைப் புறக்கணித்து வருவதால், சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஒரு வருட இடைக்காலத் தடை விதிப்பதாக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இது சிம்பாப்வே மற்றும் சிம்பாப்வே ஏ அணிகளுக்குப் பொருந்தும்.

தவிர, வீரர்கள் சபைக்கு எதிராக செயற்படும் பட்சத்தில் புதிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் கூறினார்.

டெஸ்ட் அந்தஸ்து ரத்துச் செய்யப்பட்டுள்ளால், ஏப்ரல் மாதம் தொடங்கவிருந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ரத்தாகியது.

சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தன்னாட்சிக் கொள்கையை எதிர்த்து அந்த நாட்டைச் சேர்ந்த 37 கிரிக்கெட் வீரர்கள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

## விளையாட்டு

## ஒருநாள் போட்டிகளிலிருந்து கில்கிறிஸ்ட் விரைவில் ஓய்வு!



சிட்னி—

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் ஓய்வுபெற முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களில் அடம் கில்கிறிஸ்ட்டும் ஒருவர். இவர் மைதானத்தில் நிலைத்து நின்று ஆடத் தொடங்கிவிட்டால் எதிரணிப் பந்துவீச்சாளர்களின் நிலைமை அதோ கதிதான்.

அந்த அளவுக்கு ஆக்ரோஷமாக ஆடி ஓட்டங்களைக் குவிப்பவர் கில்கிறிஸ்ட். சிறந்த விக்கெட் காப்பாளர் பட்டியலில் முன்னிலையில் இருப்பவரும் இவரே ஆவார்.

34 வயதான கில்கிறிஸ்ட் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற முடிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருநாள் போட்டித் தொடர்களிலிருந்து கில்கிறிஸ்ட் ஓய்வு பெற்றாலும், டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து ஆடவுள்ளார். இந்தத் தகவலை கில்கிறிஸ்ட்டின் நண்பரும், அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியின் முன்னாள் பந்துவீச்சாளருமான ஜூலியன் தெரிவித்தார்.

227 ஒருநாள் போட்டிகளில் இதுவரை ஆடியுள்ள கில்கிறிஸ்ட் மொத்தம் 7,566 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 12 சதங்களும், 42 அரைச் சதங்களும் அடங்கும். அதிகபட்சமாக 172 ஓட்டங்களை அடித்துள்ளார். கில்கிறிஸ்டின் சராசரி 35.68 ஆகும். அவர் ஒருநாள் போட்டிகளில் இதுவரை மொத்தம் 911 பவுண்டரிகளும், 106 சிக்சர்களும் அடித்துள்ளார். 328 பிடிகளை எடுத்துள்ள அவர், 42 முறை ஸ்டம்பிங் செய்தும் எதிரணி வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

## நியூஸிலாந்து பயணம் ஒத்திவைப்பு


கிறிஸ்ட்சேர்ச் —

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு கோடைகாலத்தில் இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணத்தை ஒத்திவைத்துள்ளது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் - 2007 நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அனுசரித்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்தது.

ஒத்திவைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் போட்டி 2008 டிசெம்பரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அப்போது இந்திய - நியூஸிலாந்து இடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் ஆட்டங்கள் நடைபெறும்.

## இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்!



பைசலாபாத்—

ராவிட் தலைமையிலான இந்திய அணிக்கும், இன்சமாம் தலையிலான பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று பைசலாபாத் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரின் 2 ஆவது டெஸ்ட் இன்று பைசலாபாத் இக்பால் மைதானத்தில் தொடங்கி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்றைய டெஸ்டில் துடுப்பாட்ட வரிசையில் இந்திய அணியில் மாற்றம் இருக்காது என்றும், முதல் டெஸ்டில் ஆடிய அதே வீரர்களே களமிறங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், பந்து வீச்சில் மட்டும் சிறிது மாற்றம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லாகூர் மைதானம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக அமைக்கப்பட்டது. இதன் காரணமாக முதல் டெஸ்டில் இரு அணி வீரர்களின் பந்து வீச்சும் எடுபடவில்லை. இதற்கு மாறாக இக்பால் மைதானம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக செயற்படும் வகையில் மைதானம் தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்திய அணியில் 3 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெறக் கூடும். இதனால் பதான், அகர்கருடன், சகீர்கானுக்கு வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிகிறது. சகீர்கான் களமிறங்கும் பட்சத்தில் ஹர்பஜன் சிங் ஆடுவது சந்தேகம்தான். இந்த ஒரு மாற்றம் மட்டுமே இந்திய அணியில் செய்யப்படும். தவிர வேறு எந்த மாற்றமும் இருக்காது.

பாகிஸ்தான் அணி வீரர்கள் அனைத்து வகையிலும் சிறப்பாக ஆடக்கூடியவர்கள். யுனுஸ்கான், முகமட் யூசுப், அப்ரிடி, கம்ரன் அக்மல், ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். கப்டன் இன்சமாம் மற்றும் அக்தர் முழு உடல் தகுதியில்லாது ஆடி வருகின்றனர்.

இருவரும் காயத்துடன் பங்கேற்று வருகின்றனர். இது அந்த நாட்டு கிரிக்கெட் சபை நிர்வாகத்திற்கு புதுப்பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

அநேகமாக இன்றைய டெஸ்டில் அக்தர் களம் இறங்க வாய்ப்புக் குறைவு என்றே தெரியவருகிறது. இக்பால்




மைதானத்தில் தற்போதுள்ள இந்திய வீரர்களில் டெண்டுல்கர் மட்டுமே விளையாடியுள்ளார்.

அவர் 16 வயதில் அதாவது 1989 ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடியபோது அணியில் இடம் பெற்றிருந்தார். பைசலாபாத்தில் அப்போது நடந்த 2 ஆவது டெஸ்டில் டெண்டுல்கர் முதல் இனிங்சில் 59 ஓட்டங்களை எடுத்தார்.

இந்த ஓட்டங்கள் இந்தியா அந்த டெஸ்ட் போட்டியை சமன் செய்ய உதவியது. அதன் பிறகு 16 வருட இடைவெளிக்குப் பின்னர் டெண்டுல்கர் இப்போது களமிறங்குகிறார். அவரின் இளமைக்கால ஆட்டம் இந்த டெஸ்டில் தொடருமா என்பது ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

# தெனாலி ராமன்

கிருஷ்ணதேவராய மன்னரின் ராணியாருக்கு அரண் மனையில் ஏராளமான பூனைகளிருந்தன. ஒரு நாள் தன் பெண் அடியாட்களை அழைத்த ராணி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பூனையைக் தொடுத்தனுப்பினார். பூனைக்கு ஆதாரமளிப் பதற்காக பசுவும் கொடுக்கப்பட்டது. தெனாலிராமனுக்கும்



அவ்வாறே பூனையும் பசுவும் ராணியால் வழங்கப்பட்டது.

திடீரென்று ஒரு நாள் தன் பூனைகளையெல்லாம் பார்த்து விடவேண்டும் என்ற ஆவல் ராணிக்கு எழுந்ததால், பெண் அடி யாட்களையும் அவர்களிடமிருக்கும் பூனைகளையும் அரச சபைக்கு எடுத்துவருமாறு உத்தரவிட்டார். மறுநாள் எல்லோரும் தத்தமது பூனைகளை அங்கே கொண்டு சென்றனர். ராமனும் தன் பூனையுடன் அங்கிருந்தார். அவளின் எண்ணப்படி, ராமனிடமிருந்த பூனையே பசியால் வாடி, சாகும் தறுவாயில் இருக்கலாமென்றே நம்பியிருந்தார். ஆனால் அதற்கு மாறாக, அப்பூனை அழகாகக் கொழுத்து வளர்ந்து ஆரோக்கியமாக இருந்தது இதைக் கண்ட அரசியும் அரசனும் மிக மகிழ்ச் சியடைந்தனர். எல்லாப் பூனைகளுக்கும் அரசன் கிண் ணங்களில் பால் வார்த்து வைத்தான். ராமனின் பூனை யைத் தவிர மற்றெல்லாப் பூனைகளும் பாலைக் குடித்தன.


பாலைக் கண்டதுமே ராமனின் பூனை அவனிடமே திரும்பவும் ஓடிச்சென்றது . இதைக் கண்ட மன்னன் பூனை எதற்காகப்பால் குடிக்கவில்லை என அவனிடம் மன்னர் வினவினார்.

மகாராஜா இது ஒரு வித்தியாசமான பூனை. இதை எனக்குக்கொடுத்த நாளிலிருந்து இப்படித்தான் நடந்து கொள்கிறது. பாலைக்கிண்ணத்தில் வைக்கும்போதெல் லாம் பூனை ஓடியே விடுகிறது.

அரசன் ஆச்சரியமடைந்தார். அதைத் தன்னருகில் எடுத்துக் கொண்டு அதை ஆராய்ந்தார். அதன் வாயைச் சுற்றிலுமாக இருந்த தோற்பகுதி எரிந்திருந்ததைக் கண்டு, இது எவ்வாறு ஏற்பட்டது என்றார். ஐயா! உங்களுக்கு அதன் உண்மை என்ன வென்று நன்கு விளங்கியிருக்கும். பாலைக் குடிக்கும் ஒவ் வொரு தடவையும் பூனை கண்களை மூடிக்கொண்டு குடிப்ப தால் இது ஒரு கூடாத செயல் என எண்ணி அதிலிருந்து விடுவித்துக்கொள்ள விரும்பினேன்.

முதல் நாளன்று இப்பூனைக்கு முன்னால் சூடா கக் கொதிக்கும் பாலைக் கிண்ணத்தில் வைத்தேன். வழமைபோல் அது கண்களை மூடிக்கொண்டு கிண் ணத்திற்குள் வாயை வைத்தது. ஆனால் அது பாலைத் தொட்டதும் அதன் வாய் எரிந்ததால் பயத் தில் எங்கோ ஓடியது. அன்றிலிருந்து பால் குடிப்ப தைத் தவிர்த்து வருகிறது என்றான் ராமன்.

இதைக் கேட்ட அரசனும் அரசியும் சிரிப்பொலி யால் சபையை அதிரவைத்தனர். அப்போது கிருஷ்ண தேவராயர் கேட்டார், ஆனாலும் மற்றைய எல்லாப் பூனைகளையும் விட உனது பூனை மட்டும் ஏன் ஆரோக்கியமாக, கொழுத்து மிக அழகாக இருக்க வேண்டும்? பசு ஒன்று கொடுக்கப்பட்டதே அந்தப் பாலை என்ன செய்கிறாய்? எனவும் வினவினார் அதற்கு ராமன் பதிலளிக்கும் போது, என்னை மன் னித்துக் கொள்ளுங்கள் மகாராஜா. இந்த ஏழையின் குடிசையில் ஏராளமான எலிகள் இருக்கின்றதால், எனது பிள்ளைகளே அந்தப் பாலைப் பயன்படுத்தி வருகின்ற னர். பெருத்துக்கொளுத்த எலிகளைத் தின்பதன் தயவில்தான் பூனையின் வாழ்வு தங்கியிருக்கிறது என்று கூறக்கேட்ட அரச னும் அரசியும் மீண்டும் வெடிச்சிரிப்பை உதிர்த்தனர். அதன்



பின் ராமனின் பூனையைத் தம்மோடு வைத்துக்கொள்ளப் போவதாகக் கூறிய அரசன், பசுவை அவனுக்கே பரிசாகக் கொடுத்து விடுவதாகவும் அறிவித்தான்.



# துருவன்

## சின்னஞ்சிறு வண்ணமலர்



வண்ண வண்ண
நிறப் பூவின்
வடிவழகைப் பார்.
எல்லை இல்லா
அதன் அழகை
எண்ணி எண்ணிப் பார்.

சின்னஞ் சிறு
இதழ்களினால்
சிரிக்கிறதே பார்.
சிவப்பு மஞ்சள்
நீலமென்று
மலர்கிறதே பார்.

வண்டு வந்து
அமர்ந்திருந்து
மகிழ்கிறதே பார்.
தேனை உண்
களிப்பதனாலடு
மயங்குவதைப் பார்.

சின்னஞ் சிறு
பிள்ளைகளும்
கொத்து மலர்போல்
சிரித்து விளையாடுகின்ற
கோலமதைப் பார்.

-கிருபா.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர்
அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில்
அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும்
திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின்
தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி
வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர்
அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக
உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு
தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................
கற்கும் பாடசாலை :.................................
கற்கும் தரம் :.................................
வீட்டு முகவரி :.................................
பிறந்த திகதி :.................................
ஆர்வமுள்ள துறைகள் :.................................
.................................

............... ...............
திகதி ஒப்பம்

............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் :- பிரபாகரன் யாதவன்
தரம் :- 01
பாடசாலை :- யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- சித்திரம் வரைதல், T.V பார்த்தல்.

பெயர் :- சித்திரகுமார் சிவனுஜன்
தரம் :- 03
பாடசாலை :- யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- படம் வரைதல். கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர் :- அருள்வாணி சண்முககுமார்
தரம் :- 04
பாடசாலை :- யா/ இணுவில் மத்திய கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், கல்வி கற்றல்



பெயர் :- பவித்திரா சிவஞானம்
தரம் :- 04
பாடசாலை :- யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், T.V பார்த்தல்.



பெயர் :- கந்தசாமி ஆதித்தன்
தரம் :- 07
பாடசாலை :- யா/ புற்றளை மகா வித்தியாலயம்
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம் வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.



**இங்குள்ள இரு படங்களிலும் எட்டு வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**











# ஏமாற்றியதற்கான பரிசு

ஒரு காட்டில் இருந்த ஓநாயும் நரியும் தமக்குள்ளே பேசிக் கொண்டிருந்தன. அந்தவழியே குரங்கொன்று வந்தது. "என்ன! கடுமையான யோசனையோடு இருக்கிறீர்கள் போலத் தெரிகிறதே!" என்று ஓநாயையும் நரியையும்பார்த்துக் கேட்டது குரங்கு.

"வேறொன்றுமில்லை, தந்திரமான முறையொன்றைப் பாவித்து எமது உணவுத் தேவையை நிறைவேற்றலாமா என யோசிக்கிறோம்" என்றது ஓநாய். மூவரும் சேர்ந்து ஆலோசிக்கத் தொடங்கின. இறுதியில் ஒரு தீர்வுக்கு வந்தன. அதன்படி -

"எமது தந்திரம் பலிக்க வேண்டுமானால் நேர்மையானவர்கள் தான் அதற்கு உதவியாக இருப்பார்கள். ஆகவே கிராமப்புறத்தை நோக்கிப் போவோம். அங்கே நிச்சயமாக எமது தந்திரம் பலிக்கும்" என்றது நரி. மூவருமாக மாறுவேஷமிட்டுக் கொண்டு ஒரு கிராமத்தை நோக்கி நகர்ந்தன.

வழியில் ஒரு கிராமப்புறப் பெண் நடந்து வந்துகொண்டிருந்தாள். மூவரும் அவளைச் சந்தித்தனர். "வணக்கம் அம்மா!" என்று தொடங்கினர். அவளும் வணக்கம் தெரிவித்தாள். "நாங்கள் கிராமப்புறத்தைப் பார்த்து ரசிப்பதற்காகக் கிளம்பி வந்தோம். தாகமும் பசியும் ஒன்றாகி கிட்டது. நீங்களும் நல்லவளாகத் தெரிகிறது. உண்பதற்கு ஏதாவது உண்டா?" என்று கேட்டது ஓநாய்.

எனது வீட்டுக்கு வாருங்கள் என அழைத்தாள் அந்தப் பெண். "உங்களிடம் கோழிக்குஞ்சு இருந்தால் கொடுங்கள் எங்களுக்கு மிகவும் பிரியமானது." என்றது நரி. "நான் மாமிசம் உண்பதில்லை. எனக்குக் கொஞ்சம் கடலை இருந்தால் போதுமானது" என்றது குரங்கு.

பரவாயில்லை என்று கூறிய அந்தப் பெண் இரண்டு கோழிக் குஞ்சுகளையும் கொஞ்சம் கடலையையும் கொடுத்தாள். அவை மூன்றும் சந்தோஷமாக உண்டு முடித்தன.

கோழியுடன் விருந்தை முடித்துக் கொள்ள ஓநாயும் நரியும் விரும்பவில்லை. "நீங்கள் நேர்மையான பெண்ணாயிற்றே உங்களிடம் ஆடுகள் இருக்கிறதா? தந்தால் மிகவும் சந்தோஷமாக இருக்கும்." என்றன ஓநாயும் நரியும். "எனக்குக் கொஞ்சம் பட்டாணிக்கடலை இருந்தால் கொடுங்கள்" என்றது குரங்கு. அப்படியே அந்தப் பெண்ணும் அவற்றைக் கொடுத்து மூவரையும் சந்தோஷப்படுத்தினாள். அவையும் அவற்றை உண்டு தீர்த்தன.

"நீங்கள் மாடு வளர்ப்பதில்லையா? மாடுகளின் இறைச்சி இவற்றைவிட ருசியானவை" என்று ஓநாய். நரியும் தலையை ஆட்டி ஆமோதித்தது. "கடலைப் பருப்பைவிட முந்திரிப்பருப்பு மிகவும் ருசியாக இருக்கும்." என்றது குரங்கு.

பாவம் - அந்தப் பெண்ணும்தான் வளர்த்த ஒரு மாட்டைக் கொண்டுவந்து காட்டினாள். ஓநாயும் நரியும் சந்தோஷத்துடன் பங்குபோட்டுக் கொண்டன. குரங்கு முந்திரிப் பருப்பைக் கொறித்துச் சுவைத்தது. ஓநாய், நரி என்பவற்றுடன் தனக்கும் நல்ல காலம்பிறந்ததாக மகிழ்ந்து கொண்டது குரங்கு. விருந்து சிறப்பாக முடிந்தது.


ஓநாயும் நரியும் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. "இவைகளைவிடச் சிறந்ததாக வேறொன்றும் இல்லையா?" என்று கேட்டது ஓநாய்.

"ஒன்று மட்டும் இருக்கிறது" என்று கூறி வீட்டிற்குள் சென்ற அந்தப் பெண் நன்கு தீட்டி வைத்திருந்த கைக்கோடரியை எடுத்து வந்தாள். தன்னை இனியும் ஏமாற்ற முடியாது என்பதைத் தெரிவிக்க விரும்பிய அந்தப் பெண், கொண்டுவந்த கோடரியால் மூவரையும் வெட்டிச் சரித்தாள். தாங்கள் அந்தப் பெண்ணை ஏமாற்றியதைப்புரிந்துகொள்ளாத நிலையில் அவர்கள் வாழ்வு முடிந்துபோனது.

**குட்டிக்கதைகள்**

# மந்திரப் பானை

கிட்டத்தட்ட ஆறு வருடகாலமாக வீதிகளில் அலைந்து வாழ்க்கை நடத்தியவன் தான் ராமு. அவன் பல பட்டினங்கள், நகரங்கள் பற்றிய அனுபவங்களையெல்லாம் நன்கு பெற்றிருந்தான். பணம் கொடுக்கும் எவருக்காகவும் வீதிகளில் ஓடிச்சென்று பொருட்கள் வாங்கிக் கொடுத்தும் கடுமையாக உழைத்தும் வந்தான். அன்றைய தினம் ராமுவின் வாழ்வில் விதிவசமான மாற்றமொன்று நிகழ்ந்தது. வேலைக்குச் செல்லாமல் தன் நண்பர்களான செல்வன், ஜனகன் போன்றோருடன் தங்கியிருந்தான்.



அப்போது யாரோ உரத்துக் கத்தும் சத்தம் கேட்டது. தம்பி இங்கே வா. எனக்காக ஒரு வேலை செய்து தருகிறாயா? அவ்வேலை செய்தற்காக 50 ரூபாய் கிடைத்தது. அதில் ஒரு ஐஸ்கிறீம் சாப்பிட்டான். அதன்பின் அவன் மட்பானைகளுடன் கூடையுடன் வந்த வேறொரு வயோதிப மனிதனைக் கண்டான். அவனருகே ஓடிச்சென்று கூடையைத் தூக்கினான். அதற்குக் கூலியாக 10 ரூபாய் கேட்டான். ஆனால் அவன் உறுமினானே தவிர எதையும் கூறவில்லை. மிகப் பாரமான கூடையை அவனிடம் கொடுத்துவிட்டு வேகமாக நடையைக் கட்டினான். அந்த மட்பானைகள் அதிக பாரமாக இருந்ததால் அவனை வருத்தியது. அதிக தூரம் போகவேண்டுமா ஐயா? எனக் கேட்டதற்கு. இல்லை இல்லை நாம் போக வேண்டிய இடத்தை அண்மித்துவிட்டோம் என்றார் அவர். ஆனாலும் அதிக தூரம் சென்றபின் ஒரு சிறிய கோற்றுக்கு அருகாமையில் வந்து விட்டனர்.

கூடையைக் கீழே வை தம்பி என்று கூறிய அந்த வயோதிபர். பணப்பையை நடுங்கும் கைகளால் எடுத்தார். பணத்துக்காக கையை நீட்டிய போது, ராமு முன்பு கேட்ட பணத்தைவிட அதிகமாக கொடுக்குமாறு கூறினான். ஆனால் அந்த வயோதிபர் பதிலாக, பிரகாசமான ஒரு ரூபாய் நாணயக் குற்றியைக் கையில் எடுத்தார்.

ஐயா ... அது பணம்... என்று இழுத்தான் ராமு. ஒரு ரூபாதான் தம்பி, அதுமட்டுந்தான். உனக்கு அதன்பிறகு வேலை கஸ்டமாக இருக்காது என்று கூறிய முதியவர்.

தன் கூடையில் இருந்து வெடித்துப் பிளந்த பானையொன்றை எடுத்து ராமுவின் முன்னால் வீசினார். பின்னர் உளறிக்கொண்டு வீட்டுக்குள் சென்று மறைந்தார். தன் காலடியில் கிடந்த உடைந்த மட்பானையைப் பார்த்தவாறு நின்ற ராமுவுக்கு கண்ணீர் வந்தது. அதன்பின் விழித்தும் பார்த்தான் மழை பெய்தது. ஒருவருமற்ற அத் தெருவில் அமர்ந்து தன் முகத்தை கைகளுக்குள் மறைத்தான். "நான் அழமாட்டேன் அது ஒருவரின் உடல் நலத்துக்கு கேடானது". என்றொரு மெல்லியகுரல் கேட்டது.

என்ன? என்ற திகைப்போடு திரும்பினான் ராமு. மேலே பார்த்தான். கீழே என் றது குரல். ஆனால் அங்கே ராமுவின் காலடியில்... நாலங்குல மனிதன் ... நீண்ட வெண்தாடியுடன் நின்றிருந்தான். மஞ்சள் காவியுடையும், பளிச்சிடும் கைத்தடியுடனும் காணப்பட்டான்.

யார் நீ? ராமு கேட்டான், நான்தான் ஜெனீ... உனது நற்காரியங்களுக்காக உன்னை வாழ்த்தப் போகிறேன் என்றது ஜெனீ. ராமு பணத்தைக் கேட்க எதிர்பார்த்தான். ஆனால் பதினெட்டு வயதிற்கு குறைந்த பையன்களுக்கு நான் பணம் கொடுப்பதில்லை. எமக்கு அதற்கு அனுமதி கிடையாது என்று கூறி -

மந்திர வார்த்தைகளை அச்சிறிய மனிதன் உச்சரித்தான். மரமொன்று வளர்ந்து பெரிதாகி, கிளையாகி பழங்கள் நிறைந்து காணப்பட்டன. அப்பழங்கள் மென்மேலும் பருமனடைந்து வெடித்ததுதான் தாமதம். பொற்காசுகள் அவற்றிலிருந்து கொட்டத் தொடங்கின.

தனக்கு வேண்டியதையெல்லாம் அள்ளினான் ராமு. அதைப் பெரிய பையொன்றில் கட்டினான். "இதைக் கொண்டு சென்று பெரும் செல்வந்தன் ஆவாய். உன் கஸ்டத்துக்கு கிடைத்த ஊதியமாக இதை எடுத்துக்கொள். இதற்கு மேல் பேராசைப் படாதே" என்று கூறிய சின்னஞ்சிறிய மனிதனுடன் பழமரமும் மாயமாய் மறைந்தது.

தன் கைக்குக் கிடைத்த செல்வத்தை எடுத்துக் சென்ற ராமு சந்தோஷத்துடன் வாழ்ந்தான்.

## சக்திவாய்ந்த நதி



1960ம் ஆண்டில், தோட்டப் பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுதல் மற்றும் ஹைட்ரோ மின்சக்தி விநியோகத் தேவைகளுக்காக எகிப்திலுள்ள அஸ்வான் அணைக்கட்டு நைல் நதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்டது. அது கட்டப்படும்போது, அந்தப் பெரிய அணைக்கட்டு மிகப் பாரிய தொழில்நுட்பத்துடன் வெற்றிகரமாக விளங்க வேண்டுமெனச் சிந்திக்கப்பட்டது. எப்படியிருந்தபோதிலும், அணைக்கட்டுக்குப் பின்னால் பாரிய நீர்த்தேக்கத்தை உருவாக்கியதால் அனைத்து நிலங்களுக்குமான நீர்ப்பாசனத் தேவை நிறைவேற்றப்பட்டது.

அஸ்வானின் உயர்ந்த அணைக்கட்டு கிராவல் மற்றும் மணல் மீதாக 3280 அடிகள் (1000மீற்றர்) அகலத்துக்குக் கட்டப்பட்டிருக்கிறது. 100 மைல் (160 கி.மீ) நீளத்துக்கு அதன் கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டது.

## நீர்வீழ்ச்சி நுட்பம்



அமெரிக்கா மற்றும் கனடாவில் நயகரா நீர்வீழ்ச்சியானது மிகப் பெரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகக் கருதப்படுகிறது. இரு நாடுகளுக்குமிடையில் அமைந்திருக்கும் Horse shoe நீர்வீழ்ச்சிகள் 51 மீற்றர் (167 அடி) உயரமும் அமெரிக்க நீர்வீழ்ச்சிகள் 54 மீற்றர் (177 அடி) உயரமும் கொண்டதாகும். இந்த நீர்வீழ்ச்சிகள் மின்சக்தியைக் கொடுக்கின்றன.

## பலம் வாய்ந்த அணைக்கட்டு



அமெரிக்காவிலுள்ள ஹூவர் அணைக்கட்டு, (Hoover Dam) 1930 தொடக்கம் 1936க்கும் இடையில் கொலறாடோ நதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்டது. கொங்கிரீட் அணைக்கட்டின் பிரதான பகுதி 221 மீற்றர் (726 அடி) உயரமுடையது. முன்னாள் ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவரின் பெயரிலமைந்த இந்த அணைக்கட்டு, வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துதல், மின்சக்தி, தண்ணீர் விநியோகத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## மலரும் பூ

| | | |
|---|---|---|
| பெற்றோரிடத்தில் | - | அன்பு |
| இரு நண்பர்களிடையே | - | நட்பு |
| மகிழ்ச்சியின் போது | - | சிரிப்பு |
| உழைக்கும் போது | - | களைப்பு |
| தவறின் போது | - | தப்பு |
| வாதாடும் போது | - | எதிர்ப்பு |
| மனதில் துயரிடம் போது | - | வெறுப்பு |
| தவறை உணரும் போது | - | மன்னிப்பு |

அ.தயானி, தரம் - 06
யா/சென்தோமஸ் பெண்கள் பாடசாலை.

## தெரிந்து கொள்ளுங்கள்

- உலகின் முதலாவது தபாலட்டை (Post Card) 1869, ஒக்டோபர் 1 இல் ஒஸ்திரியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகம் முழுவதிலும் 2500 வகையான பாம்பு இனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரியது அனகொண்டா இனம்
- 250 இற்கும் மேற்பட்ட வகையான ஆமைகள் உலகிலுண்டு.
- ஆமைகள், பல்லிகள், பாம்புகள், முதலைகள் உட்பட ஊர்வனவுப் பிராணிகள் 7000 இற்கும் மேற்பட்ட இனங்கள் உலகிலுள்ளன.
- சிங்கி இறாலுக்கு 10 கால்களுண்டு
- மனித உடலிலுள்ள மிகக் கடினமாக பொருள் பல் எனாமல்
- டெலஸ்கோப்பைக் கண்டு பிடித்தவர் ஹன்ஸ் லிப்பஷே (Hans Lipershay)
- 13 எண் இத்தாலி நாட்டில் மட்டும் அதிர்ஷ்ட எண்ணாகக் கருதப்படுகிறது.
- சராசரி மின் குமிழ் 750 தொடக்கம் 1000 மணித்தியாலங்கள் வரை நீடித்து எரியும்.

## விடுகதைகளும் விடைகளும்

1) இருட்டு வீட்டில் முரட்டுச்சிப்பாய் அவன் யார்?
2) உயரப் பறக்கும், ஊன்றுகோலில் ஏறி நிற்கும். அது என்ன?
3) திரவமாய் பிறந்தான், புகையால் மறைந்தான். அவன் யார்?
4) அத்திவாரம் இல்லாமல் அரண்மனைகட்டினேன். அது என்ன?
5) தண்ணீரும் மழையுமின்றிப்பயிர் பச்சையாகஇருக்கிறது. பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பாக இருக்கிறது. அது என்ன?

**விடைகள்**

1. பூட்டு 2. கொடி 3. பெற்றோல் 4. கப்பல் 5. கிளி

யோ.குணாளன் கிறிஷ்ரி, தரம் - 4

1) வரும்போது வெண்சிவப்பு, வளர வளரத் தகதகப்பு, போகும் போது கடும் சிவப்பு. அது என்ன?
2) மழைகாலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
3) தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர். அவர் யார்?
4) அரை மொட்டைக்கு 50 முடி என்றால் முழுமொட்டைக்கு எத்தனை முடி?
5) பழுக்காத பழம் என்ன பழம்?
6) படிப்பிக்காத மாஸ்டர் என்ன மாஸ்டர்?
7) நிற்காத, இருக்காத, படுக்காத வாங்கு என்ன வாங்கு?
8) வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?


**விடைகள்**

1. சூரியன் 2. தவளை 3. செங்கல்
4. ஒரு முடியும் இல்லை 5. ஐஸ்பழம்
6. லான்மாஸ்டர் 7. அலவாங்கு 8. மண்புழு

இ.அனித்தா, தரம் - 7
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை




# உங்கள் கைவண்ணம்



வி.அருள்கெனடி, தரம் - 8,
யா/கலட்டி றோ.க.ஆ.பாடசாலை.




சண்முகபவன், தரம் - 2,
யா/இணுவில் மத்திய கல்லூரி.



வி.அருள்கெனடி, தரம் - 8,
யா/கலட்டி றோ.க.ஆ.பாடசாலை.




அ.மக்லின், தரம் - 7,
யா/கலட்டி றோ.க.த.க.ஆண்கள் பாடசாலை.



ப.யாதவன்,
தரம் - 1,
உடுவில் மகளிர் கல்லூரி.

## காலை வேளையில்



காலையில் கதிர்களை உதிர்த்து
பூமியில் ஒளியைப் பொதித்து
வையகத்தில் வனப்பைச் சேர்த்து
மலர்ந்தான் ஆதவன்.


காலைக் கதிரவன் உதிப்பு
மண்ணில் மலர்கள் செழிப்பு
பூமி மாதாவின் கண் விழிப்பு
மலர்களில் வண்டுகள் களிப்பு.

இத்தனை வரவேற்பும் ஆதவனுக்கு
எத்தனை எதிர்பார்ப்பு அவன் வரவுக்கு
விடியற் பொழுதில் மகிழ்வதற்கு
அவன் தருகின்றான் ஒளி எமக்கு.


வண்ண மலர்களின் வனப்பில்
சின்னப் பட்சிகளின் சிரிப்பில்
தோன்றும் எண்ண அலையில்
நனைவோம் நாம் மழையில்.

ப.யதுசரன், தரம் - 2,
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

21 - 01 - 2006 நமது ஈழநாடு - சனிக்கிழமை பக்கம் 07


முதியோரைப் பேணுங்கள்
பௌரல் நாட்டை ஆண்ட பிரமதத்த மன்னன் என்ன காரணமோ தெரியவில்லை - முதியோர்களில் வெறுப்பைக் காட்டிவந்தான். அதனால் வயோதிப ஆண்களையும் பெண்களையும் துன்புறுத்துவதில் அரசனும் அவனது ஆட்களும் ஈடுபட்டிருந்தனர்.
வேகமாக நடமாடு
தயவு செய்து அவனையும் முடித்து விடுங்கள்
அவர்களைக் கேலி செய்வது மட்டுமன்றி அவர்களின் உணவு, தண்ணீரைக்கூட அப்புறப்படுத்தியும், கிழட்டு மாடுகளைக் கொலை செய்தும் வந்தனர்.
பழைய கட்டடங்கள், குடிசைகள், மாட்டு வண்டிகள் போன்ற பழையன எல்லாமே அவர்களால் சிதைக்கப்பட்டன.
கடைசியில் அந்த இராச்சியத்தைச் சேர்ந்த மக்கள் தமது வயோதிப முதியோர்களையும் வேறு உறவினர்களையும் அரசன் துன்புறுத்தாதிருப்பதற்காக வேறிடங்களுக்கு வெளியே ஆரம்பித்தனர்.
நீங்கள் இங்கிருப்பதால் மட்டும் தொல்லைக்காளாக நேரிடுகிறது. உங்களின் நன்மைக்காக உங்களையெல்லாம் நான் அனுப்பவேண்டியிருக்கிறதே.
என்றாலும் எங்களை யார்தான் கவனித்துக்கொள்வார்கள்? நாம் எங்கேதான் போவது?
எனக்குப் புரிகிறது. ஆனால் அரசன் கண்டுகொண்டால் உங்களைத் துன்புறுத்தி விடுவார். அல்லது கொல்லவும் கூடும். தயவுசெய்து இங்கிருந்து போய்விடுங்கள்.
தங்கள் சொந்த வதிவிடங்களிலிருந்து வயோதிபர்கள் வெளியேற்றப்படுவது பரிதாபமான காட்சியாக இருந்தது. கடவுளரின் கடவுளாக சாகா இதைக் கண்டார்.
பிரமதத்தாவுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும்.
முதியவர் வேடத்தில் பௌரஸக்கு வந்தார். பழைய மாட்டு வண்டியில் ஏறி அமர்ந்தார். அந்த வண்டியை இழுத்ததும் கிழட்டு மாடுதான்.
அன்றுஅந்த நாட்டு அரசாங்க விழாவொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. தலைநகரில் மக்களெல்லோரும் கூடியிருந்தனர்.
அலங்கரிக்கப்பட்ட யானை மீது பிரமதத்தா கம்பீரமாக அமர்ந்திருந்தான். அவன் பின்னால் பெரிய பான்ட் வாத்திய பவனி வந்து கொண்டிருந்தது.
இப்படிச் செய்ய எவ்வளவு துணிச்சல் அவனுக்கு. அவன் யாராக இருக்கலாம்.
முதியவரைப் பிடித்துக் கொலை செய்யுங்கள். வண்டியையும் உடைத்தெறியுங்கள்.
அப்போது பழைய வண்டியிலிருந்த வயோதிப மனிதன் அரச பவனிக்கிடையே புகுந்து முன்னோக்கித் தன் வண்டியைச் செலுத்தினான்.
கிழட்டு முகங்களை நான் காண விரும்புவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? என் பார்வைக்கப்பால் கொண்டுபோய் விடுங்கள்!




முதியவர் மௌனமாக இருந்தார்.
மற்றையோரை விடவும் அரசனின் பார்வையில் படும்படியாக மட்டும் அவரிருந்தார்.
மகாராஜா எந்த மனிதன்? எந்தக் கிழட்டு மனிதன்? என்ன- கூறுகிறீர்கள்.
குருடர்களா நீங்கள்! அவனைப் பிடித்து உடனே கொன்றுபோடுங்கள்.
தன் கொடூரத்தனமான செயற்பாடுகளால் அரசனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாக மக்கள் கருதினர்.
எங்கள் மன்னருக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு விட்டது.
!
?
அந்தக் கிழவன் தலையில் தயிர்ச் சட்டியை வைத்துக் கொண்டு கிழட்டு மாட்டு வண்டியை ஓட்டுவது உங்களுக்குத் தெரியவில்லையா?
எல்லோரும் மூச்சுப் பேச்சற்ற நிலையில் எதுவும் செய்வதறியாது இருந்தனர்.
ஆனால் மக்களோ அங்கு எதையும் காணாமல் வியப்புற்றனர்.
ஆத்திரமடைந்த அரசன் மேலும் மேலும் உரக்கக் கத்தினான்.
நானே அவனைக் கொல்கிறேன்.
தன் வாளை உறையிலிருந்து உருவி எடுத்த அரசன் வண்டியை நோக்கி வீசினான்.
வாள் முதியவரைத் தாக்குவதற்குப் பதிலாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவரிடையே வீழ்ந்தது.
திகிலடைந்த மக்கள் சின்னாபின்னமாக ஓடத்தொடங்கினர். போகும்போது அரசனையும் திட்டித் தீர்த்தனர்.
அந்த முட்டாளுக்குப் பைத்தியம் மட்டுமல்ல. எங்களையும் கொல்லப் பார்க்கின்றானே!
திடீரென்று அந்தக் கிழவன் தன் சுய உருவத்தை அடைந்து அரசன் ?ன் தோற்றமளித்தான்.
எப்படி நீ கேவலமான பரிகாசத்துக்காளாகி விட்டிருக்கிறாய்?
அப்படியான உணர்வைத்தான் அந்த வயோதிபர்கள் நீ துன்புறுத்தும்போது பெற்றிருக்கின்றனர். ஒரு நாளைக்கு நீ கூடக் கிழவனாகத்தான் வரப்போகிறாய். மறுபடியும் இதே துன்பத்தைத்தான் பெறப் போகிறாய்.
திரும்பிப்போய் முதியவர்களைக் கௌரவப்படுத்தி அவர்கள் வாழ்த்தினால் மட்டும் நீ காப்பாற்றப்படுவாய்! மீண்டும் அவர்களைக் கொடுமைப்படுத்தினால் உன்னைத் தண்டிக்க நானிருக்கிறேன்.
அரசன் தன் தவறை உணர்ந்தது மட்டுமல்லாது, அதை ஒரு படிப்பினையாகவும் எடுத்துக்கொண்டான்.
தன் தவறான செய்கைகளையெல்லாம் கைவிட்ட பிரம்மதத்தன் நேர்மை தவறாத மன்னனாக ஆட்சி செய்தான்.
உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். எவ்வித பயமுமின்றி உங்கள் பெற்றோர்களை மீண்டும் வீட்டுக்குக் கொண்டுவந்து அன்பாக வைத்திருங்கள்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கண்ணுடையார் என்பவர் கற்றோர் இவ்விரண்டும்
புண்ணுடையார் கல்லா தவர்

-திருக்குறள்

## நமது நோக்கு

# இயல்புநிலை சாத்தியமா?

கல்வி கற்பதற்கான இயல்பான சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் - கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்துவது தொடர்பாக எடுத்த முடிவு தொடர்பாகவே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

யாழ்.பல்கலைக் கழகம் என்பது தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை மீட்புக்கான போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டு வந்திருக்கிறது.

கல்வியும், போராட்டமும் ஒன்றோடொன்று பிணைந்ததாகவே யாழ். பல்கலைக் கழகம் இயங்கி வந்தது. இந்த அடிப்படையில்தான் 2001 ஆம் ஆண்டு - பொங்கு தமிழ் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்பின்னர் தமிழ்மக்களின் தாயக, தேசிய, தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் சர்வதேச ரீதியில் புதிய வழியில் பிறப்பெடுத்தது.

இந்த வகையில் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்ட வாழ்வுடன் பின்னிப் பிணைந்து போயிருக்கும் யாழ். பல்கலைக்கழகம், இப்போது காலவரையறையின்றி மூடப்பட்டுக் கிடக்கிறது.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனங்களும், இராணுவ அடக்குமுறைகளும்தான் இயல்பற்ற நிலையைத் தோற்றுவித்தது.

பல்கலைக்கழகத்தை சுற்றிவரக் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரால் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினருமே துன்புறுத்தப்படும் நிலை ஏற்பட்டதால்தான் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

பல்கலைக்கழக சமூகத்தின் மீது-துணைவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள் என இராணுவ வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதை நாகரிகம் கொண்ட சமுதாயம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது.

அமைதிப் பேரணியை ரணகளமாக்கியதன் விளைவாக - மாணவர்களைத் துன்புறுத்தியதன் விளைவாகவே இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்தைச் சூழ இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள் என ஜனாதிபதி வாக்குறுதி அளித்த அடுத்த நாளே படையினர் புதிய காவலரண்களை அமைத்ததுடன், மாணவர்களைச் சோதனையிட்டு கெடுபிடிகளை ஏற்படுத்தினர்.

இப்படிச் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு கொண்ட அரசாங்கமும், அதன் படைகளும் ஒருபோதும் மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்துமென எதிர்பார்க்க முடியாது.

பொங்குதமிழ் என்று தமிழ் மக்கள் பொங்கியெழுந்த போதே அரசுக்கு யாழ். பல்கலைக்கழகம் ஒரு புரட்சிக் களமாக மாறிவிடும் என்ற அச்சம் பிடித்துவிட்டது.

அதனால்தான், வன்முறைகளை ஏவிவிட்டு பல்கலைக் கழக சுற்றாடலை இறுக்கமான பாதுகாப்பு நெருக்கடிக்குள் கொண்டுவந்து கல்விக்கான புறச்சூழலை முற்றாகவே மாற்றியுள்ளது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழ குவிக்கப்பட்டிருக்கும் படையினரால் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்வது இதுதான் முதல் தடவையல்ல.

ஆயினும், இப்போது ஏற்பட்டிருக்கும் நிலை மிக மோசமானது. பொங்கு தமிழ் நிகழ்வுக்கு முன்னின்று உழைத்தோரை தேடித் தேடிப் பிடித்துத் தாக்குவது, வெளிமாவட்ட மாணவர்களை இனி வீதிகளில் கண்டால் சுடுவோமென மிரட்டுவது எல்லாமே கல்வியைத் தொடர்வதற்கான புறச் சூழலாகத் தெரியவில்லை.

இத்தகைய இராணுவ நெருக்கடி மிக்க சூழலில் இருந்து கல்விகற்பதென்பது மாணவர்களால் முடியாத காரியமே.

இந்த நிலையில், அரசாங்கம்தான் அடுத்த கட்டமாக கல்விக்கான புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். படையினரை அகற்றி, முற்றிலும் இயல்பான நிலையை உருவாக்குவதன் மூலமே இது சாத்தியப்படும்.

ஆனால், தமிழரின் கல்வியைச் சீரழிக்க நினைக்கும் சிங்கள பௌத்த தேசியவாதம், இப்படியான நிலையை ஏற்படுத்துமென்று நம்பமுடியாதுள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# மஹிந்தவைக் கொல்வதற்காகப் புலிகள் தம்புள்ளவில் முகாம் அமைத்துள்ளனராம்

## சிங்களப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு

ஜனாதிபதியைக் கொல்லும் முயற்சியில் புலிகள் தம்புள்ளவில் முகாமிட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்புள்ள பிரதேசத்தில் 10 ஆயிரம் குளத் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்ளும் போது, அவரைக் கொலை செய்வதற்கு புலிகள் திட்டமிட்டுள்ளதாக தமது பத்திரிகைக்கு நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்திருப்பதாக அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதற்காக புலிகள் தம்புள்ள பொருளாதார மையத்தில் வர்த்தக நிலையங்கள் பலவற்றில் சிங்கள வர்த்தகர்கள் ஊடாக 80 தொடக்கம் 90 லட்சம் வரையான பணத்தைக் கொடுத்து அந்தப் பொருளாதார மையத்தின் தொழிலாளர்களாகவும், பாரம் தூக்குபவர்களாகவும், நாட்டாமையாளர்களாகவும் சிறந்த துப்பாக்கியாளர்களை ஈடுபடுத்தியுள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

10 ஆயிரம் குளத்திட்ட வைபவம் ஜனவரி மாதம் 16ம் திகதி என ஏற்கனவே திட்டமிட்டிருந்தாலும், அது ஒத்திவைக்கப்பட்டு அது மீண்டும் இந்த மாதக் கடைசியில் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் அமைப்பு தற்கொலைக் குண்டுதாரிகளையோ, துப்பாக்கிதாரிகளையோ பயன்படுத்தலாம் என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## எம்.பிக்களின் சம்பளம் 11 ஆயிரத்தால் அதிகரிப்பு!

கொழும்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 11 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் அதிகரித்துள்ளமையால் - பிரதமரிலிருந்து அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 11 ஆயிரத்து 210 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து செயற்படுத்தப்படும் விதமாக இந்தச் சம்பள அதிகரிப்பு இடம் பெறவுள்ளது.

இதற்கமைய பிரதமரின் சம்பளம் 34 ஆயிரத்தில் இருந்து 46,400 ரூபாவரை 12,400 ரூபாவாலும், அமைச்சர்களின் சம்பளம் 29,215 ரூபாவில் இருந்து 41, 850 வரை 11,955 ரூபாவாலும், பிரதி அமைச்சர்களின் சம்பளம் 28,750ல் இருந்து 40,625 ரூபா வரை 11,775 ரூபாவாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 22, 100 ரூபாவிலிருந்து 33,310 ரூபாவரை 11,210 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அகதியாகத் தமிழகத்துக்குச் சென்றவர் ஆழ்ந்த உறக்கத்தில் அடித்துக்கொலை!

சென்னை

இலங்கை அரச வன்முறைகளுக்குப் பயந்து இந்தியாவுக்கு அகதியாகச் சென்ற ஈழத்தமிழர் ஒருவர் இந்தியாவின் அகதி முகாமில் ஆழ்ந்த நித்திரையில் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தியாவின் தமிழ் நாட்டின் மரக்கானம் என்ற இடத்துக்கு அருகாமையில் இந்தக் கோரச் சம்பவம் நடந்துள்ளது.

இலங்கை அரசின் வன்முறைகளுக்குப் பயந்து இந்தியாவுக்கு இந்த இளம் குடும்பஸ்தர் தனது மனைவி, பிள்ளைகள் சகிதம் அண்மையில் அகதியாகச் சென்றுள்ளார். 26 வயதுடைய நித்தியானந்தம் என்ற நேசன் தனது 24 வயது நிரம்பிய மனைவி கவிதா, 2 வயது குழந்தை பானு அல்லது மீராதர்சினியுடன் இந்தியாவுக்கு அகதியாகச் சென்றார்.

தனது மனைவி குழந்தையுடன் ஆழ்ந்த நித்திரையில் உறங்கிய நேசனை -ஒரு தமிழ் குழுவினர் அடித்துக் கொலை செய்துள்ளதுடன், மனைவி கவிதா கணவனைக் காப்பாற்ற இடை நடுவில் அகப்பட்டதால் படுகாயமடைந்தார். நேசனை அடித்து கொலை செய்தவர்கள் இந்தியாவுக்கு ஈழத்தமிழர்கள் அகதியாக வரக் கூடாது என்று கூறித் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

# அன்ரன் பாலசிங்கத்துக்கு ஹெலி வழங்கக்கூடாது!

## எச்சரிக்கிறது ஜாதிக ஹெல உறுமய



கொழும்பு

கிளிநொச்சி செல்லவுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு இராணுவத்தின் ஹெலி வழங்கக் கூடாது என்று ஜாதிகஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா, பாலசிங்கத்தின் பயண ஏற்பாட்டுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும் என்றார்.

ஆனால், இது தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையையும் எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நடைபெறும் இராணுவத்தினர் மீதான கிளைமோர் தாக்குதல்களுக்கு, விடுதலைப் புலிகளே பொறுப்பு என்பதைப் பகிரங்கமாக பாலசிங்கம் அறிவித்த பின்னர் இராணுவத்தினர் பாதுகாப்புடன் வன்னிக்குச் செல்லட்டும்.

அரசு இந்த முடிவை மிகக் கடுமையாக எதிர்ப்பதாகவும், இராணுவப் பாதுகாப்புத் தேவையெனில் தாக்குதலுக்கான பகிரங்க ஒப்புதலை வெளியிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# எங்களது சாவைத் தடுப்பதற்காக ஆயுதப் பயிற்சி பெறுவது அவசியம்!



**கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற – கிளிநொச்சி மாவட்ட மற்றும் தாயகத்தின் ஏனைய பகுதிகளில் பொதுமக்களுக்கான தற்காப்பு பயிற்சியை ஆரம்பித்து வைத்த கா.வே.பாலகுமாரன் ஆற்றிய சிறப்புரையிலிருந்து ...**

அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக எமது தேசியத் தலைவர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அன்று கடற்கரைச்சேனையில் நடைபெற்ற எழுச்சி மாநாட்டில் கடைசியாக கூறினர்..... ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டியதுதான்... யோசிக்க என்ன இருக்கிறது? சாவுக்குள் எமது வாழ்வை நாங்கள் நுழைத்துவிட வேண்டும் என்று.

வீழ்ந்தால் எமது சாவு வீரச்சாவாக இருக்கவேண்டும். களச்சாவாக இருக்கவேண்டும் என்று பொதுமக்கள் அறைகூவல் விடுத்தனர். இன்று நாம் இங்கே கூடியிருப்பதன் பிரதான நோக்கம் எங்களுடைய சாவை நாங்கள்



தடுக்கவேண்டும். எங்களுடைய சாவை நாங்கள் தடுக்காமல் யார் தடுப்பது?

எங்களுடைய தேசத்தை, எங்களுடைய உயிரை, எங்களுடைய வாழ்வை, எங்களுடைய வளத்தை நாங்கள்தான் காக்க வேண்டும். உங்களுக்காகவே ஒரு காலகட்டத்திலே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் படை என்ற கட்டுமானத்தினுடைய அடிப்படை நாடாக விளங்கும் வியட்நாமிலே அதனுடைய முன்னாள் தலைவர் ஜியால் கூறினார்- விடுதலைப் போராட்டத்துக்கு அடிப்படை ஆயுதப் போராட்டம். அதற்கு அடிப்படை போராளிகள். அவர்களுக்கு அடிப்படை மக்கள். அன்று அவர்கள் அங்கே நிரந்தரப் படை, குடிப்படை, பிரதேசப்படை, தற்காப்புப் படை என்று பலவிதமான படைகளை மக்களுக்கூடாக உருவாக்கிக் காட்டினார்கள்.

ஒரு கட்டத்தில் பொதுமக்களுக்கு போர்க்கலை கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். போர் தொடர்பான அறிவும், ஆயுதங்களை கையாளும் ஆற்றலும் இறுதியில் பொதுமக்களிடம் தஞ்சம் புகவேண்டும் என்று அவர் கூறினார். அதனால்தான் ஆனானப்பட்ட பத்து லட்சம் படையைக் கொண்ட அமெரிக்காவை தூசியென தூக்கியெறிந்தார்கள்.

இன்று நாங்கள் உலகம் என்று கூறும் போது நீங்கள் யோசிக்கலாம் யார் இங்கே இருக்கிறார்கள் என்பது. உங்களுக்கு தெரியாது, இங்கே நாம் நடக்கிற ஒவ்வொரு நிமிடமும் உலகத்தின் கண்களுக்குச் சென்று கொண்டே இருக்கின்றது. செய்மதிக்கூடாகக் கூட எங்களுடைய இந்த நடமாட்டங்கள் யாவும் உலகத்தின் தலைமைச் செயலகங்களுக்கு போய்க் கொண்டிருக்கின்றன.

என்றும் இல்லாத அளவுக்கு உலகத்தின் பார்வை இன்று எங்கள் மீது இருக்கிறது. கிளிநொச்சி மண்ணிலே நீங்கள் கூடி நின்று கை உயர்த்திக் கூறிய அந்தக்குரல் உலகத்தின் கடைசி குடிமகனின் செவிவரைக்கும் எட்டும்.

நீங்கள் இங்கே சும்மா கூடி நிற்கவில்லை. ஒரு தேசத்தினுடைய குரலாக கூடுவதற்கு கிளிநொச்சி மண்ணுக்கு ஒரு வாய்ப்பு வாய்த்திருக்கிறது. ஒரு பெரிய அற்புதமான காலம் கனிந்திருக்கிறது. நாங்கள் 1997 ஆம் ஆண்டுகளில் பயிற்சியை ஆரம்பித்த போது கிளிநொச்சி மண் எமது கட்டுப்பாட்டில் இல்லை.

இன்று இந்த ஏ-9 பிரதான வீதிக்கு ஊடாக நாங்கள் பயிற்சி எடுத்து ஓடும் போது, இந்த உலகம் பார்க்கப் போகின்றது. தன்னுடைய கடைசி வாய்ப்பை இழந்துவிட்டோம் என்பது உலகத்துக்கு தெரியப் போகின்றது.

இன்று நாங்கள் இந்த இடத்தில் கூடி, எங்களுடைய சாவை தடுப்பதற்காகவே நாங்கள் தற்காப்புப் பயிற்சி எடுக்கிறோம். எங்களை கொல்ல எந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவோ அதே ஆயுதங்களை நாம் கைகளில் ஏந்தி எங்களைக் காக்கப் போகின்றோம்.

எந்த சாதாரண சிங்கள பொதுமகன் பயிற்சி எடுத்து இராணுவமாக மாறி எங்களைக் கொன்றானோ, அதே இராணுவத்தை நாங்கள் எதிர் கொள்ளப் போகின்றோம். இன்று நாங்கள் விடுதலைப் போரிலே எழுச்சியும், முதிர்ச்சியும் பெற்று எங்களுடைய சிக்கலை நாங்களே கையாளத் தயாராகிவிட்டோம். அதுதான் இன்றைய கிளிநொச்சி பயிற்சி ஊடாக உலகத்துக்கு நாங்கள் கூறவுள்ள செய்தியாக இருக்கின்றது.

நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். இன்று உள்ள நிலைமை என்னவெனில் மிகத் தெளிவாக நாங்கள் கூறுகின்றோம். கடைசி வாய்ப்பைக் கூட நாங்கள் இப்போது வழங்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்த வாய்ப்பு என்பது எங்களுடைய பலத்தின் அடிப்படையில், எங்களைத் தயார்ப்படுத்தலின் அடிப்படையில் நாங்கள் செய்ய வேண்டியதாக உள்ளது.

போரைத் தடுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், சாவைத் தடுக்க நீங்கள் விரும்பினால், போர் செய்வதற்கு ஆயத்தமாக வேண்டும். போர் செய்ய ஆயத்தமானால்தான் போரைக் கூட தடுத்திட முடியும். போர் வந்தாலும் தடுத்திட முடியும். இந்த முடிவை இந்தத் தேசம் எடுத்து விட்டது என்பதற்காக ஏற்கனவே இந்தப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, கிளிநொச்சி மண்ணில் நாங்கள் மிக முக்கியமாக சர்வதேசத்தின் கவனத்தின் ஈர்ப்பாக நீங்களே கூடி, உங்களுடைய கரங்களை ஒன்றிணைத்து, பயிற்சியளித்து, நாங்கள் ஒரு முடிவை நோக்கி நகர்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

மிகப் பெரிய பலத்தோடு நாங்கள் இன்று எழுந்து நிற்கிறோம். அந்தப் பலத்தை ஒன்றுபடுத்தி, முகிழ்த்தெடுத்து திரட்டிக் கொடுப்பதற்கான சகல ஆயத்தங்களையும் நாங்களே செய்ய வேண்டும். எங்களுக்காக நாங்களே எங்களுடைய போராட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் நாங்கள் இன்று கூடி நிற்பதற்கு ஊடாக, எங்களுடைய குரலை ஒருமித்து ஒலிப்பதற்கு ஊடாக நாங்கள் ஒரு முடிவை உலகத்துக்கு கூறிக் கொள்கிறோம். அந்த முடிவின் செயற்பாட்டின் அடிப்படையில் எங்களுடைய பெருந்தலைவர் எடுக்கக்கூடிய அந்த முடிவினுடைய செயற்பாட்டின் வேகத்தில் எங்களுடைய விடுதலையை வெல்லும் போது, இந்த மண்ணிலே நாங்கள் கூடி நின்று மீண்டும் கைகளை உயர்த்தி எங்களுடைய சுதந்திரப் பிரகடனத்தை வாசிப்போம் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இந்த ஆனானப்பட்ட மகிந்தவைக் கூட வல்லமை வாய்ந்த நாடுகளில் நாங்கள் இன்று தலைபணிய வைத்து ஒரே ஒரு விடயம்தான் நாம் கேட்கிறோம். இன்று இங்கே வந்தவர்களுக்கு கூறினோம் உலகத்தினுடைய பேரவலமான சுனாமியின் போதும் கூட சிறிதும் மனமிரங்காத இந்தச் சிங்களம் இனி எப்போது இரங்கும் என்பதற்கான வாய்ப்பை எவராலும் தரமுடியுமா என்று கேட்டால், எவரும் வாய் பொத்தி நிற்கிற உருவத்தை நாங்கள் பார்க்கிறோம்.

இந்த அற்புதமான வாய்ப்பு எங்களுக்கு வாய்த்திருப்பதற்கூடாக அடிமைத் தளையை அறுக்கக்கூடிய ஒரேயொரு சந்தர்ப்பத்தை இந்தத் தேசத்தில் வாழ்கின்ற உங்களுக்கு இந்தக் காலம் தந்திருக்கின்றமையால் மனமுவந்து இந்தத் தற்காப்பு பயிற்சியைப் பெற்று பயிற்சி எடுத்து போராடச் செல்வோம். ஒரு சாதாரண கல் -பயிற்சி பெறுவதற்கூடாக, சிற்பியின் உளிபடுவதற்கூடாக, அந்த வலியை உணர்வதற்கூடாக, தாங்குவதற்கூடாக தெய்வச்சிலையாக மாறுகிறது.

பொதுமக்களும் பயிற்சி எடுக்கும் போது புனிதமான புலிப்படையாக மாறி, தேசத்தினுடைய ஆன்மாவாக மாறி, தேசத்தினுடைய எதிர்காலத்தை நீங்களே தீர்மானிக்கக்கூடிய அந்த மாபெரும் பொறுப்பு உங்களுக்காக வருகிறது.

தொடக்கமாக நீங்கள் இங்கே திகழ்கிறீர்கள். ஆகவே வாரந்தோறும் இந்த இடத்தில் கூடி, வீதியில் சென்று இந்த செய்தியை காற்றில் உலகெல்லாம் பரப்பி, பரப்புரைப் போரிலே இந்த உலகத்தினுடைய கவனத்தை ஈர்த்து செய்தியை உலகத்துக்கு கூறி இந்த இராணுவப் பயிற்சி ஊடாக உலகத்துக்கு ஒரு அரசியல் செய்தியை கூறி, நாங்கள் எங்களுடைய இறுதிப் போருக்கான சகல ஆயத்தங்களையும் செய்வதற்காக இங்கே கூடி நிற்கிறோம்.

எல்லா சிரமங்களையும் பாராது நீங்கள் மனமுவந்து முன் வந்து இதனை ஒரு அரசியல் கடமையாக, தேசக் கடமையாக, புனிதப் பணியாக மேற்கொண்டு வெல்ல வேண்டும் என்பதற்காக உழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன் எனக் கூறினார்.

# கட்டுவகல காட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவின் ஊடுருவல்?

## பாரிய தேடுதல் வேட்டையில் இராணுவம்

கொழும்பு —

இராணுவத்தின் சிங்கப் படைப் பிரிவின் தலைமையகம் அமைந்துள்ள அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமுக்கு அப்பால் இருக்கும் கட்டுவகல காட்டுப்பகுதியினுள் ஆயுதக் குழுவினர் சிலர் ஊடுருவியிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தேடுதல்களை நடத்தினர்.

மீரிகம மற்றும் நிட்டம்புவ பொலிஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸாரும், சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த படையினரும் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை இந்தத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கட்டுவகல காட்டுப் பகுதிக்குள் ஆயுதக் குழுவினர் சிலர் ஊடுருவியிருப்பதாக பொலிஸாரின் அவசர சேவைகள் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்தத் தேடுதல்கள் நடத்தப்பட்டன.

காட்டுப் பகுதிக்குள் ஆயுதக் குழுவினர் ஊடுருவியிருப்பதாக நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் தகவல் கிடைத்ததாகவும், இந்தக் காட்டுப்பகுதிக்குள் ஊடுருவியோர் பற்றிய விபரங்கள் உள்ளபோதிலும், பொலிஸ் தலைமையகத்தின் அனுமதியின்றி அவற்றை வெளியிட முடியா தென்றும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

மேலும் நகரைச் சுற்றிப்பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வாகனங்களைச் சோதனையிட பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்த அல்லது உளவு பார்க்க வந்தனரா என சோதனையிடப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மகாராஜா நிறுவன தலைவரை இராணுவ மேஜர் கொல்ல சதி!

கொழும்பு —

மகாராஜா நிறுவனத் தலைவரைப் படுகொலை செய்யும் முயற்சியில் முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளதாகக் கொழும்பு நீதிமன்றத்தில் இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மகாராஜா நிறுவனத் தலைவர் மீதான கொலைச்சதி குறித்த முறைப்பாடு கொழும்பு மேலதிக நீதிபதி மொகமட் இஸதீன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று கைதிகளிடமும், இந்தச் சதிகுறித்து முதலில் தெரிந்து கொண்ட பொலிஸ்கொன்ஸ்டபிளிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாக இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய சிறையில் உள்ள பாதாள உலக குழுத் தலைவர் பிரின்ஸ் கொலமிடமும் வாக்குமூலம் பெறவேண்டியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இதற்கு அனுமதியளித்த நீதிபதி இந்த மனு மீது எதிர்வரும் 8ஆம் திகதியன்று விசாரணை நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் அரசாங்கம் – புலிகள் ஒப்பமிட வேண்டும்

## ஐரோப்பிய யூனியன் வலியுறுத்து

கொழும்பு —

மனித உரிமைகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டுமென்று ஐரோப்பிய யூனியன் அரசையும், விடுதலைப் புலிகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

நாட்டில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் அதிகரித்துவரும் மோதல் சூழ்நிலை காரணமாக மக்களது மனிதஉரிமை மீறப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், அந்தச் சந்தர்ப்பத்தை விலக்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று ஐரோப்பிய யூனியனில் இரு தரப்புக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் வாழும் பொதுமக்கள் கொல்லப்படுதல், பாரிய துன்புறுத்தலுக்கு உட்படுத்துதல் போன்ற சம்பவங்கள் பற்றி அதிகமான முறைப்பாடுகள் வருவதால், இலங்கையின் சமதான செயற்பாடுகளில் இணைத் தலைமைத்துவத்தை வகிப்பவர்கள் என்ற ரீதியில் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக ஐரோப்பிய யூனியன் மேலும் தெரிவித்துள்ளது.

## மாமனிதர் ஞானரதன் அவர்களுக்கு

# அஞ்சலி



தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் சிறந்த கலைப்படைப்பாளரும்
நிதர்சனம் நிறுவனத்தின் நீண்டகால வழிகாட்டியும்
தமிழீழ வீடியோ படங்களின் மூலகர்த்தாவுமாகிய

# மாமனிதர் ஞானரதன்

## அவர்களுக்கு எமது இறுதி வணக்கங்கள்

குறிப்பு : மாமனிதர் ஞானரதனின்
நினைவு வணக்க நிகழ்வு இன்று
கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில்
நடைபெறும்.

பொறுப்பாளர்கள், போராளிகள், பணியாளர்கள்
நிதர்சனம் நிறுவனமும்,
தமிழீழத் தேசியத்தொலைக்காட்சியும்

(சி/5029)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை சமாதான முயற்சியில் 2005 மிகமோசமான ஆண்டு!

## ஐரோப்பிய யூனியன் ஆணையாளர்

கொழும்பு—

இலங்கையின் சமாதான முயற்சிகளில் 2005 ஆம் ஆண்டே மிகமோசமான ஆண்டு என்று ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் லஸ்லோ சோவக்ஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்றில் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர்:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 4 ஆம் ஆண்டையொட்டி அடுத்த இணைத் தலைமை நாடுகள் கூட்டம் இலங்கையில் நடைபெறவுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டுதான் இலங்கை அமைதி முயற்சியில் மிக மோசமான ஆண்டு.

கதிர்காமர் படுகொலை, தேர்தல் புறக்கணிப்பு, வடக்கு - கிழக்கில் பாரிய எண்ணிக்கையில் படுகொலைகள் என நடந்துள்ளன.

விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம்களை உள்ளடக்கிய சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை அரசு ஏற்படுத்தத் தவறியமை பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அமைதி முயற்சிகளில் இணைத் தலைமை நாடுகளின் பங்களிப்பு அதிகூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

# கட்டப்பிராய் பகுதியில் கிளைமோர் மீட்பு!

யாழ்ப்பாணம்—

இருபாலைச் சந்திக்கும்- கட்டைப் பிராய் சந்திக்கும் இடையில் நேற்றுக் காலை 8 மணியளவில் கிளைமோர் ஒன்றை இராணுவத்தினர் மீட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை இராணுவத்தினர் வீதியில் வழமையான ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டு தேடுதலில் ஈடுபட்டபோதே வீதியோரமாக இருந்த மரத்திலிருந்த கிளைமோர் ஒன்று மீட்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியூடான போக்குவரத்துகள் தடைப்பட்டதுடன்- இருபாலை ஆடிய பாதம் வீதியூடாகப் போக்குவரத்துக்கள் இடம்பெற்றது.

சுமார் 2 மணித்தியாலங்களின் பின்னரே அந்தப்பகுதியினூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

இதேபோல் கொக்குவில் சம்பியன் வீதியில் உள்ள காவலரண் மீது நேற்றுக்காலை 10.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோதும் ஏதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் தெரியவருகிறது. (90) (12)

# பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி மகிந்த மிரட்டல்!

கொழும்பு—

சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் செய்திகளை அடக்கிப் போடுங்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாக மிரட்டல் விடுத்துள்ளார்.

நேற்று சிங்கள, ஆங்கில பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே சில பத்திரிகை ஆசிரியர்களை வெளிப்படையாகக் குறிப்பிட்டு நீங்கள் எல்லாம் செய்திகளை அடக்கிப் போடுங்கள் என்று கூறியுள்ளார்.

மேலும் நோர்வேயில் தனக்கு பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் இல்லை என்றும், தாம் நோர்வேக்குச் சென்று பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதற்காகவே தற்போதைய தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்றும் இதை சிங்கள பத்திரிகை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தாம் பேச்சு நடத்த முன்வருவது சர்வதேசத்தின் அழுத்தத்தினால்தான் என்றும் இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## பொறுமை காத்தது...

பாடசாலை மாணவர்கள், சாதாரண தொழிலாளர்கள் என அனைவரும் தமிழினம் என்ற ஒரே காரணத்தால் கோழைத்தனமாக - கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்படுகின்றனர்.

இன்றைய சமாதான சூழலை நன்கு பயன்படுத்தி சர்வதேசம் முன் எங்கும் தமிழினத்துக்கு எதிரான நாகரிகமற்ற - கபடத்தனமான கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதுடன், எமது இனத்தைச் சீண்டிப் பார்க்கவும் முனைகிறது அரசு.

சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை மட்டும் நோர்வே வழங்கினால்போதும். அதன் தலைநகரில் பேச்சுக்கள் நடைபெறக்கூடாதெனவும், சர்வதேச நாடுகள் எல்லாம் எமது இனத்தின் உண்மைத் தன்மையை விளங்கிக் கொள்ளக்கூடாதென்றும் பொய்ப்பிரசாரம் செய்கிறது அரசு.

எமது தமிழ்ப் பெண்கள், மாணவிகள் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டு - கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு நடு வீதிகளிலும், பாழ் கிணறுகளிலும் தூக்கி வீசப்படுகின்றனர். இன்றைய சமாதானச் சூழலில் புங்குடுதீவில் சகோதரி தர்சினிக்கு நடந்த அவலமும், மன்னாரில் பச்சிளங் குழந்தைகளுடன் பெற்றோரையும் சேர்த்து எரித்த கொடுமையையும் எண்ணிப் பார்க்கின்றபோது எமது நெஞ்சங்கள் வெடிக்கின்றன.

நீண்டகாலமாக தமிழ் மாணவர்களுக்கு கல்வி, தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சம் காட்டிவருவதே சிங்கள இனவாத அரசுகளின் இனவெறிப் போக்காகும். இப்படியான பாரபட்சத்துக்கு சவாலுடன் முகம் கொடுத்து கல்வியில் வெற்றிகாணும் தமிழ் மாணவர் சமூகத்தை சிங்கள இனவெறியர்கள் பொறுக்க முடியாமல் நயவஞ்சகமாகக் கொலைசெய்து வருகின்றனர்.

கடந்த 2002 பெப்ரவரி 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இன்றுவரை நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான எமது தாயகப் பிரதேசத்துக்குள் அரசியல் பணியாற்றச் சென்ற 200 இற்கு மேற்பட்ட போராளிகளும் 500 இற்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களும் சிங்கள இனவெறியர்களால் கொடூரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள், நெஞ்சங்களை உலுக்கி நிற்கிறது. இந்த நிலையில், தமிழர் தாயகமெங்கும் நிழல் யுத்தம் ஒன்றை சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டு நடத்தி வருகிறது.

வீரம் விளை நிலத்தின் வித்துக்களே!

எம் இனிய உறவுகளே! நாம் பொறுமை காத்தது போதும் பொங்கி எழுவோம்!

சர்வதேச சமூகமே! பேரினவாத அரசின் கபட நடவடிக்கைகளை நன்கு விளங்கியும் நீ மௌனம் சாதிப்பது ஏன்?

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுக்கள் உடன் நடைபெற அழுத்தம் கொடு!

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை அங்கீகரி!

இல்லையேல்...!

காலம் காலமாக அழிந்துபோய் அழிவின் விளிம்பில் நிற்கும் எமது இனம், தனது எதிர்கால வாழ்விற்கும், நிலையான இருப்புக்கும் தேசியத் தலைவரின் வழிப்படுத்தலில் பொங்கியெழுவதைத் தவிர்க்க முடியாது.

எமது தமிழீழத் தேசியத் தலைவரின் கவனத்துக்கு!

இன்றைய கண்டன எழுச்சி பேரணி மூலம் மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன ஒன்றியம் தங்களுக்குத் தயவாக விடுக்கும் அவசர வேண்டுகோள்.

மீண்டும் போரை எதிரி வலிந்து தொடங்க முனைகிறான். இனியும் கைகட்டி, வாய்பொத்தி, பேசா மடந்தைகளாகப் பொறுத்துக்கொண்டிருந்தது போதும். போரைத் தொடங்க ஆணையிடுங்கள். ஓயாத அலையென புயலாகப் புறப்படும் பொங்கியெழும் மக்கள் படை.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்று அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தம்பசிட்டியில்....

இருந்து தம்பசிட்டி - மடத்தடியூடாக மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவேளை இவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் இவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

வீதியோரமாக மோட்டார் சைக்கிளுடன் கிடந்த இவரது சடலத்தை அந்தப்பகுதி மக்கள் எடுத்துச்சென்று மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். உயிரிழந்தவரின் சடலம் தொடர்பான விசாரணை நடைபெறவுள்ளது.

## உடதலவின்ன....

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரின் இரு புதல்வர்களான லொகான் ரத்வத்த, சானக ரத்வத்த, இராணுவ லெப்ரினன்ட் விஜேரத்ன, இராணுவ மற்றும் கொமாண்டோ படையினர் உட்பட 15 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் தீபானி விஜயசுந்தர, எரிக் பஸ்நாயக்க மற்றும் சுனில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி இந்த வழக்குத் தொடங்கியது.

பின்னர் நீதிபதி எரிக் பஸ்நாயக்க மேல்முறையீட்டு நீதிபதியாக பதவியேற்றதையடுத்து இரண்டு நீதிபதிகள் முன்னிலையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டுவந்தது.

வழக்கு விசாரணையின்போது போதிய சாட்சியம் இன்மையால் இரண்டு பிரதிவாதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தற்போது 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அனுருத்த ரத்வத்த உள்ளிட்ட 7 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

15 ஆயிரம் பக்கங்களில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. இந்த வழக்கு தீர்ப்பு 700 பக்கங்களில் அமைந்திருந்தது. இதன்படி குற்றவாளிகளாகக் காணப்பட்ட லெப்ரினன்ட் ரஞ்சித் தர்மசிறி விஜயரட்ன, சுனில் டி சில்வா, அனுரகுமார, கமல் விஜயரட்ன, புத்தி திஸநாயக்க ஆகிய ஐந்து இராணுவத்தினருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன் மேலதிகமாக தலா 100 வருட கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. (01)

## ராணுவ....

கனகசபை பத்மநாதன், தங்கேஸ்வரி ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

படையினரின் வன்செயல்களைக் கண்டிக்கும் மனு இறுதியில் வாசிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிகள் மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக்குழு அதிகாரி இன்யோன், நோர்வே தூதரகம், அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றுக்கு அனுப்புவதற்காக உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்த எழுச்சி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி, விடுதலைப் புலிகளின் தளபதிகள் நாகேஸ், பிரபா, வெல்லாவெளி கோட்ட தளபதி யோகராசா, மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சீராளன் மற்றும் தளபதிகள், போராளிகள் உள்ளிட்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

## மாதகல்....

இருதரப்புக்கும் இடையே சுமார் 45 நிமிடங்கள் மோதல்கள் நீடித்ததாகவும் தெரியவருகிறது.

மோதல்களின் பின்னர் குறிப்பிட்ட இரண்டு படகுகளும் தப்பிச்சென்றுவிட்டதாகவும் கடற்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்தியொன்று தெரிவித்தது.

## மட்டக்களப்பு எழுச்சி நிகழ்விலிருந்து...







## ஞானரதனுக்கு...

எளிமை அவரோடு கூடப்பிறந்தது. அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்வார். அனைவரையும் கவர்ந்துகொண்ட உயரிய பண்பாளர்.

இவர் ஒரு சிறந்த தேசபக்தர். எமது மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். எமக்கு ஒரு நாடுவேண்டும். எமது மக்களுக்கு விடுதலைவேண்டும். அவர்கள் சுதந்திரமாக கௌரவமாக வாழ வேண்டும். சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் எனத் துடியாய்த் துடித்தார்.

தேசப்பற்று அவரை எமது போராட்டத்தோடு இறுகப்பிணைத்தது. மக்களோடும், போராளிகளோடும் இணைந்து நின்று தாயக விடுதலைப்போரில் பெரும் பழுக்களை தானும் சுமந்துகொண்டார். நீண்டகாலமாக எமது விடுதலை இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு பெரும் பொறுப்புக்களை சுமந்து தனது முதுமைக் காலத்திலும் உறுதியோடு உழைத்தார். தனது அறிவாற்றலாலும் கடும் உழைப்பாலும் தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்துக்கு அவர் ஆற்றியபணி என்றுமே பாராட்டுக்குரியது.

இவர் தமிழீழ மண் தந்த தலைசிறந்த எழுத்தாளர். ஆற்றல் மிக்க ஒரு கலை இலக்கியப்படைப்பாளி. சிறந்த அரசியற் சிந்தனையாளர். சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் சதா கருத்துப்போர் நடத்தினார்.

பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் ஓய்வில்லாமல் எழுதினார். எமது மக்களிடத்தில் விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் தட்டியெழுப்பினார். சிங்கள இனவாத அரசின் பொய்யான பரப்புரைகளுக்குச் சாட்டையடிகொடுத்து எமது தேசத்தின் உண்மை நிலையை உலகிற்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர் எமது விடுதலை இயக்கம் ஒளிப்படத் துறையில் இன்று நிகழ்த்தியுள்ள பெரும் பாய்ச்சலுக்கு நடுநாயகமாக நின்று செயற்பட்டார். நிதர்சனம் நிறுவனம் தோன்றிய காலம் முதல் இற்றைவரை அதன் வேராகவும் விழுதாகவும் அதைத் தாங்கி நின்று செயற்பட்டார்.

எமது விடுதலைப் போராளிகளை ஒளிப்படத்துறையில் பயிற்றுவித்து அவர்களை சிறப்பாக வழிப்படுத்தி, நெறிப்படுத்தி ஒரு தேசியத் தொலைக்காட்சியை உலகம் பூராகவும் ஒளிபரப்புகின்ற அளவுக்கு வளர்த்தெடுப்பதில் அச்சாணியாக இருந்து செயற்பட்டார். சிறிய குறும்படம் முதல் முழு நீளத்திரைப்படம் வரை பல்வேறு ஒளிப்பேழைகளை ஞானரதன் என்ற பெயரில் தயாரித்து நெறிப்படுத்தினார்.

இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து, எழுந்த விடுதலை இயக்கம் களத்திலே படைத்த சாதனைகளையும், வெற்றிகளையும் ஒளிவீச்சு, வீடியோ, சஞ்சிகைகளாகவும், விவரணங்களாகவும் தயாரித்து அவற்றை உலகின் கண்களுக்குக் காட்சிப்படுத்த உதவினார். இவர் ஆரவாரமின்றி அமைதியாக ஆற்றிய விடுதலைப் பணி அளப்பரியது.

திரு வை.சச்சிதானந்தசிவம் (ஞானரதன்) அவர்களின் இனப்பற்றுக்கும், விடுதலைப்பற்றுக்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதி உயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

சுய வாழ்வின்சுகபோகங்களை துறந்து தேசவிடுதலை என்னும் உன்னத இலட்சியத்துக்காக உறுதியோடு வாழ்ந்த உன்னத மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை. அவர்கள் எமது தேச ஆன்மாவில் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார்கள். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாடசாலைகளில் மறியல் போராட்டங்கள் நடத்துவது மாணவர்களின் கல்வி நடவடிக்கையே பாதிக்கிறது !

## யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் —

பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை முடக்கி பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மறியற் போராட்டம் செய்வதால், மாணவர்களின் கல்வி நடவடிக்கை பெருமளவில் பாதிப்படைகின்றது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலய அதிபர் இடமாற்றத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மறியற்போராட்டம் தொடர்பாக கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரி விக்கையில் -

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர்மட்டும் தங்கி இருப்பதில்லை. பாடசாலையின் வளர்ச்சி அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியிலேயே தங்கி இருக்கிறது. பாடசாலையொன்றின் வளர்ச்சியில் அதிபரின் பங்கு முக்கியமாக இருக்கின்ற போதிலும், முழுமையாக அதிபரில் தங்கி இருக்கமாட்டாது.

பாடசாலை ஒன்றில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் இருக்கிற போது, பாடசாலையின் தரத்துக்கு - அந்தத் தரமுடைய அதிபரை நியமிக்கவேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது.

பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் அதிபர் ஒருவர் இல்லாத போது பாடசாலையில் ஏற்பட்ட அச்ச உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரும் நோக்கிலேயே - புதிய அதிபரை உடனடியாக நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதன் விளைவாலேயே பாடசாலையின் தரத்துக்கேற்ப அதிபரை நாம் நியமித்திருந்தோம்.

பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் - அதிபர், ஆசிரியர் இடமாற்றம் நிகழ்கின்ற போது, மாணவர்களும், பெற்றோர்களும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் மறியற் போராட்டம் செய்வதன் மூலம் இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என நினைக்கக் கூடாது.

மாறாக பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும், கற்றலோடு தொடர்புடைய ஏனைய புறச் செயற்பாடுகளும் பாதிப்படைந்து, மாணவர்களின் எதிர்காலக் கல்விநிலை மிகவும் பாதிப்படையும் நிலைமைக்கே தள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளை கல்வி கற்கின்ற பாடசாலைகளின் செயற்பாடுகளில் அக்கறையாக இருக்க வேண்டும். அத்தகைய நிலைமைகளில் பாடசாலைகளில் ஏற்படுகின்ற இடமாற்றங்கள் - புதிய ஆசிரியர்கள், அதிபர்களின் நியமனம் செய்கின்ற வேளையில் கற்றல் நடவடிக்கைகளை முடக்கும் வகையில் நடந்து கொள்வதன் மூலம் பாடசாலையின் தரமும் மாணவர்களின் கல்வி நிலையும் வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.




குருநகர் - புனித யாகப்பர் ஆலயப் பங்கின் ஒளி விழா நிகழ்வில் யுவதிகள் வழங்கிய நடனத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் மீறப்படும் மனித உரிமைகள்; ஆணைக்குழு அலுவலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் தற்போது இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான கலந்துரையாடல் - யாழ்.நகரில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மனித உரிமைகளுடன் தொடர்புடைய ஐந்து அமைப்புகள் கலந்து கொண்டன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி றோகித பிரியதர்ஷன தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - முக்கியமாக தற்போது யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் முகம் கொடுக்கும் மனித உரிமை மீறல் பிரச்சினைகளான ஆட்கடத்தல், காணாமல் போதல், இனம் தெரியாதவர்களின் கொலைகள் எனப் பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதத்தில் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இளைஞர்கள் மற்றும் இனம் தெரியாதவர்கள் நடத்திவரும் கொலைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ நெருக்கடிகள் உட்பட பல மனித உரிமைகளுடன் தொடர்புடைய விடயங்களும் இதில் ஆராயப்பட்டன.

இதில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற நோர்வேஜியன் அகதிகளுக்கான சபை, மனித உரிமைகள் இல்லம், அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியன கலந்து கொண்டன. இந்த அமைப்புக்கள் அனைத்தும் மனித உரிமைகள் விடயத்தில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகள் மிகவும் பாதகமான நிலமையை உருவாக்கும் என எடுத்துக் கூறியுள்ளதுடன், இங்கு மனித உரிமைகள் முழுமையாகப் பேண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தின.

அத்துடன் மனித உரிமைகளைப் பேண எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகள் இவற்றிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்து.



இளைப்பாறிச் செல்லும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் என்.குணசீலனுக்கு கல்லூரியில் நடத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவில் பகுதித் தலைவர் எஸ்.பாலேந்திரா நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (12)

# புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு மாணவரகளுக்கான பண்ணிசைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் பண்ணிசைப்போட்டிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இந்தப் போட்டி அடுத்த மாதம் 12ஆம் திகதி வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 3,4,5ஐச் சேர்ந்த மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும், 6,7,8ஐச் சேர்ந்த மாணவர்கள் மத்திய பிரிவிலும், தரம் 9,10,11 ஐச் சேர்ந்த மாணவர்கள் மேற்பிரிவிலும் பங்குபற்ற முடியும். கீழ் பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய மந்திர மாவது நீறு எனும் திருநீற்றுப் பதிகப்பாடல்கள் முழுவதும் மனனம் செய்திருக்க வேண்டும்.

மத்திய பிரிவில் தோற்றும் மாணவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய நத்தார் படை எனும் திருக்கேதீச்சரத் திருப்பதிகப் பாடல்களை மனனம் செய்திருக்க வேண்டும்.

மேற்பிரிவில் தோற்றும் மாணவர்கள் திருநாவுக்கரசர் சுவாமி பாடிய சொற்றுணை வேதியன் என்னும் நமச்சிவாய திருப்பதிகப் பாடல்கள் முழுவதும் மனனம் செய்திருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறும் மாணவருக்குத் தங்கப் பதக்கமும், இரண்டாமிடத்தைப் பெறும் மாணவருக்கு வெள்ளிப் பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவருக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்படவுள்ளது.

இந்தப் போட்டிகளில் இடம்பெறும் பாடல்கள் அடங்கிய நூலை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

# பொலிகண்டியில் நிறுவப்பட்டு வரும் படகு கட்டுமானத் தொழிற்சாலை

வடமராட்சி —

சுமார் 90 லட்சம் ரூபா செலவில் பொலிகண்டிப் பகுதியில் புதிய படகு கட்டுமானத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டுமானத் தொழிற்சாலைக்கான செலவை நோர்வே நாட்டு 'கேஷல் கொம்பையின்ஸ்' (நோர்வே கரையோரச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சபை) யும், எ.ஜே.எவ் படகுத் தொழிற்சாலையின் கட்டுநாயக்க கொழும்பு நிறுவனமும் இணைந்து நோர்வே நண்பர்களின் உதவியுடன் மேற்கொண்டுவருகிறது.

இதன் முதற்கட்ட வேலைகள் வடமராட்சி வடக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் ஊடாக நடைபெற்று வருகிறது.

இதன் முதற்கட்ட வேலைக்கு 10 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றதாகவும் இந்தப் படகுத் தொழிற்சாலை அமைக்கப்படுவதன் மூலம் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமூகத்துக்கு புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன படகுகளை மக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளதாகவும் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் க.சூரியகுமாரன் தெரிவித்தார். (12)

## வைத்திய மாணவருக்கு கொழும்பில் கருத்தரங்கு

நெல்லியடி —

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இறுதியாக சித்தியடைந்து வெளியேறிய 21 ஆவது அணியைச் சேர்ந்த 29 பேர் கொண்ட குழுவினர் உள்ளகப் பயிற்சிக்கு (ஒரு வருடம்) தம்மைப் பதிவு செய்வதற்கு நேற்று முன்தினம் கொழும்புக்குச் சென்றனர்.

இலங்கை முழுவதிலுமுள்ள மருத்துவ பீடங்களில் இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்து வெளியேறிய 700 இற்கும் மேலான வைத்திய மாணவர்களுக்குமான இந்தக் கருத்தரங்கு நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

தொடர்ச்சியாக நடைபெறும் ஒருவாரக் கருத்தரங்கின் பின்னர் அவர்கள் உள்ளகப் பயிற்சி பெறும் வைத்தியசாலைகளுக்கான இடங்கள் நிர்ணயிக்கப்பட்டு நியமனக் கடிதங்களும் வழங்கப்படவுள்ளன. (13)

## நினைவாலய வளாகத்தில் புதிதாகக் காவலரண்கள்

நெடுந்தீவு —

நெடுந்தீவு, மாலித்துறை முகம் பகுதியில் உள்ள குமுதினிப்படகில் படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவாலய வளாகத்தில் - தற்போது கடற்படையினர் சிறிய காவலரண்களை அமைத்து, பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளமையால் மக்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக இந்த வளாகத்தில் கடற்படையினர் தங்கியிருந்த போதும், தற்போது இந்த நினைவாலயத்தைச் சுற்றி சிறிய காவலரண்களை அமைத்துப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை திடீர் திடீரென இந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் துறைமுகம் ஊடாகப் பயணிக்கும் பொதுமக்களைச் சோதனையிடும் நடவடிக்கையையும் மேற்கொண்டு பொதுமக்களை அச்சத்துக்குள்ளாகி வருகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. (113)

# காயமுற்றோரை காப்பதற்கு விசேட அம்புலன்ஸ் சேவை

## யாழ்.போதனாவைத்தியசாலை ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

அசம்பாவிதங்களின் போது காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் உடனடியாகச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படின் - யாழ்.போதனா வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையை நாடலாம் என போதனாவைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

குடாநாட்டில் ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் மற்றும் பழிவாங்கல் சம்பவங்களின்போது காயமடைந்தவர்களை காப்பாற்றுவதற்கு அச்சம் காரணமாக எவரும் முன்வருவதில்லை.

இதனால் பெருமளவில் இரத்தப் போக்கு ஏற்பட்டு மரணங்கள் சம்பவிக்கும் துர்ப்பாக்கியங்களைத் தவிர்ப்பதற்காகவே வைத்தியசாலை நிர்வாகம் இந்தச் சேவையை வழங்க முன்வந்துள்ளது.

அம்புலன்ஸ்வண்டி தேவைப்படுவோர் யாழ்.போதனா வைத்தியசாலையின் 021 -222 2261 அல்லது 021 -222 5154 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக அழைப்பை ஏற்படுத்தி - பின் அந்த இலக்கத்திலிருந்து அழைப்பாளருக்கு கிடைக்கும் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்பட்டு - கட்டுப்பாட்டாளர் ஊடாக 256 என்ற துணை இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி அம்புலன்ஸ் வண்டி தேவைப்படும் விலாசம் (விசேட அடையாளத்துடன்) குறிப்பிட்டு சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏமாற்று வேலைகளைத் தவிர்க்கும் வகையில் அம்புலன்ஸை அழைப்போர் எந்தத் தொலை பேசியிலிருந்து அழைப்பை ஏற்படுத்துகிறாரோ அதன் இலக்கம், பெயர் மற்றும் முகவரி என்பவற்றை வழங்கினால் மாத்திரமே அம்புலன்ஸ் வண்டி அனுப்பப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மக்கள் மீதான இராணுவ வெறியாட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்!

## கண்காணிப்புக்குழுவிடம் ஞானம் வலியுறுத்து

வவுனியா —

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் மீதான இராணுவ வெறியாட்டங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புளியங்குளம் அரசியற்துறை செயலகத்தில் நேற்றுமுன்தினம் பி.ப 2.00 மணிக்கு நடைபெற்ற போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி பெல்ட் நில்சன் கலந்து கொண்டார்.

அங்கு வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஞானம் மேலும் தெரிவித்ததாவது -

தமிழர் பகுதிகளில் பொதுமக்கள் மீது தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தி, மக்கள் கொல்லப்படுவதும், காயப் படுத்தப்படுவதும் உடனடியாக நிறுத் தப்பட வேண்டும். இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் நாம் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம், எம்மால் அரசியல் பணிகளுக்காக பயன்படுத் தப்பட்ட செயலகங்கள் சேதமாக்கப் படுவது நிறுத்தப்பட வேண்டும். வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்துக்குள் சோதனை நடத்தப்படுவது கைவிடப்பட வேண்டும்.

மேலும், முஸ்லிம் மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாகவும் கண்காணிப் புக் குழுவினருக்கு ஞானம் எடுத்து விளக்கினார்.

# கிளிநொச்சியில் தீ விபத்து; ஒருவர் தீயில் கருகி மரணம்!

கிளிநொச்சி —

கிளிநொச்சி நகரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற தீ விபத்தில் இரு கடைகள் முற்றாக எரிந்து நாசமான துடன் ஒருவர் கருகிப் பலியானார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் கனகபுரம் வீதியில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் - எரி பொருள் விற்பனை நிலையம் ஒன் றும் அதற்கருகில் இருந்த தையல் கடை ஒன்றும் தீயில் எரிந்து நாசமா கின. இந்தச் சம்பவத்தின் போது எரி பொருள் நிலையத்தில் நித்திரையில் இருந்த ஒருவர் தீயில் கருகி உயிரி ழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உருத்திரபுரத் தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குண சிங்கம் (வயது 58) என்பவரே உயிரி ழந்தவராவார்.

அதிகாலைவேளையில் இந்தப் பகுதியிலுள்ளோர் பெரும் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது எரி பொருள் விற்பனை நிலையம் கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருந் ததாகவும்,

தீயை அணைக்க அவர்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என் றும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் ஏழு கணினிகள் கையளிப்பு!





விசுவமடு —

விசுவமடு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் நேற்று முன்தினம் விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் சிறுவர் கணினிப் பயிற்சிக் கல்லூரிக்கு 07 கணினிகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை போராளி தமிழ்மணி ஏற்றிவைக்க, பொதுச்சுடரை சிறுவர் பாதுகாப்பு நிதிய உத்தியோகத்தர் ஏற்றிவைத்தார். சிறுவர்களின் கணினி அறிவை வளர்க்கும் வகையில் சிறுவர் பாது காப்பு நிதியம் இந்தக் கணினிகளை அன்பளிப்பாக வழங் கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கணினித் தொகுதியை சிறுவர் பாதுகாப்பு நிதி யத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர், சிறுவர் கணினிக் கல் லூரி ஆசிரியர்களிடம் கையளித்தார்.

## பூநகரி பிரதேசத்தில் அலுமினியம் பொருத்தல் பயிற்சிநெறி ஆரம்பம்!

பூநகரி —

கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியின் அனுசரணையுடன் இயங்கும் பூநகரி தொழில் பயிற்சி நிலையத்தில் அலுமினியம் பொருத்துதல் பயிற்சிநெறி கடந்த மாதம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இதில் 25 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்தக் கற்கை நெறி 06 மாதங்களைக் கொண்ட தெனவும் பூநகரி தொழில் பயிற்சி நிலைய இணைப்பாளர் தெரிவித் தார்.

அதேவேளை - இந்தத் தொழில் பயிற்சி நிலையத்தில் கடந்த மாதம் 20 மாணவர்கள் வெளியிணைப்பு இயந்திர திருத்தப் பயிற்சியை மேற் கொண்டுள்ளனர்.

## பொதுவிளையாட்டு மைதானம் இல்லை; வீரர்கள் விசனம்!

பூநகரி —

பூநகரிப் பிரதேசத்தில் பொரது விளையாட்டு மைதானம் இல்லா மையால் விளையாட்டு வீரர்கள் விசனமடைந்துள்ளனர்.

விளையாட்டு மைதான வசதி இல்லாததால் - பிரதேச மட்ட, மாவட்ட மற்றும் தேசிய ரீதியான போட் டிகளில் தாம் இடம்பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் - விளை யாட்டுக்களில் தகுந்த பயிற்சிகளைப் பெறமுடியாதுள்ளமைக்கும் இதுவே காரணம் எனவும் விளையாட்டு வீரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக 2003 ஆம் ஆண்டு பூநகரியில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர், பலதடவை உரியவர்களுக்கு எடுத்துக் கூறியும் இதுவரை எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நொவீப் திட்டப் பயனாளிகளுக்கு கருத்தரங்கு!

பூநகரி —

''சேவாலங்கா'' நிறுவனத்தின் ''நொவீப்'' திட்டப் பயனாளிகளுக் கான சுழற்சிமுறைக்கடன் மற்றும் நிதி கையாளல் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு - நாச்சிக்குடா, பள்ளிக்குடா பொது நோக்கு மண்டபங்களில் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் சேவாலங்கா நிறுவனத்தின் நொவீப் திட்ட முகாமை யாளர் சபேசன் தலைமையில் நடை பெற்றது.

இதில் திட்டத்தின் மையக் கிரா மங்களைச் சேர்ந்த 60 இற்கும் மேற் பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு சுழற்சிமுறைக் கடன் பற்றிய விளக்க வுரைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் விளக்கவுரைகளைப் சேவா லங்கா நிறுவனத்தின் சுனாமி காரி யாலய திட்ட முகாமையாளர் கேச வன், நொவீப் திட்ட முகாமையாளர் சபேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் நொவீப் திட்டவெளிக்கள உத்தியோ கத் தர்கள், சமூக வலுவூட்டாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக் கது.

# வட்டக்கச்சி - கிளிநொச்சி வீதியில் கிரவலால் போக்குவரத்து சிரமம்!

## விபத்துக்களில் சிக்கும் வாகனங்கள்

வட்டக்கச்சி —

வீதி புனரமைப்புக்காக வட்டக்கச்சி - கிளிநொச்சி பிரதான வீதியில் பறிக் கப்பட்டிருக்கும் கிரவலால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வீதி புனரமைப்புக்கென கிரவல் பறிக்கப்பட்டுள்ளபோதும், உரிய காலத் தில் வீதி புனரமைப்புப் பணி ஆரம் பிக்கப்படாததால் வீதிப் போக்குவரத் துக்கு இடையூறாகக் காணப்படுகிறது.

இதன் காரணமாகவே இந்த வீதி யால் செல்லும் சைக்கிள்கள் மற்றும் கனரக வாகனங்களும் போக்குவரத் தின்போது பெரும் நெருக்கடிக்குள் உள்ளாகின்றன.

அத்துடன், அண்மையில் பெய்த மழை காரணமாக இந்த வீதியில் வாகனங்கள் புதையும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அண்மையில் வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி ஊடாக புளியங்குளம் செல்வதற்காக வந்த பஸ் ஒன்று கிளிநொச்சி புதுப் பாலத்துக்கு அருகாமையில் புதை யுண்டது.

குறிப்பிட்ட இந்த வீதி உரிய காலத்தில் புனரமைக்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்களும், வீதி யால் பயணம் செய்வோரும் விசனம் தெரிவித்தனர்.

(09)

# தம்பிராசபுரம் அ.த.க பாடசாலையில் புகுமுக மாணவர்கள் அறிமுக விழா!





கிளிநொச்சி —

தமிழர் சமூக பொருளாதார அபி விருத்தி நிறுவனம் அனுசரணை வழங்கி வருகின்ற பாடசாலைகளில் ஒன்றான - கிளிநொச்சி உழவனூர் தம்பிராசபுரம் அ.த.க பாடசாலையில் தரம் 1 இற்கான புகுமுக விழா நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு பாட சாலை அதிபர் சந்திராவதி பாலகிருஸ் ணன் தலைமையில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் புதிய மாணவர் கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, வரவேற்பு நடனத்துடன் பாடசாலை யின் ஏனைய மாணவர்கள், ஆசிரி யர்கள், பெற்றோர்கள் சகிதம் பாட சாலை வளாகத்துக்குள் அழைத்து வரப் பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசி யக் கொடியை கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன் பன் ஏற்றிவைக்க, மங்கள விளக்கை உழவனூர் சனசமூக நிலையத் தலை வர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங் கத் தலைவர் ஆகியோர் ஏற்றி வைத் தனர்.

வரவேற்புரையை ஆசிரியர் திரு மதி ந.திருச்செல்வம் நிகழ்த்த, ஆசி யுரையை கிராம அலுவலர் சு.கேதீஸ் வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் புகுமுக மாண வர்கள் அனைவருக்கும் - புத்தகப் பை, கற்றல் உபகரணங்கள் ஆகி யன வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலை மிகவும் வச திக் குறைவுடன் இயங்கினாலும், மாவட்ட மட்டத்தில் கல்வியிலும், விளையாட்டிலும், கலைத் திறனிலும் சிறந்த மாணவர்களை உருவாக்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விசுவமடு - கோணாவிலில் குளத்துக்குள் வீழ்ந்தது சிமெந்து லொறி!



விசுவமடு —

கிளிநொச்சியிலிருந்து முல் லைத்தீவு நோக்கிச் சிமெந்து ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று - விசுவமடு கோணாவில் குளத்துக்குள் தடம் புரண்டது.

நேற்றுமுன்தினம் முற் பகல் 11 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் - சாரதிக்கும், தொழிலாளிகளுக் கும் எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை.

உடனடியாக சம்பவ இடத் துக்குச் சென்ற விசுவமடு காவல் பணிமனைப் பொறுப் பாளர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், போக்குவரத்து இடையூறு களையும் சீர்படுத்தினார்.

தடம்புரண்ட லொறியை குளத்துக்குள் இருந்து மீட்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.